# பிரதமர் டட்லி - ஜனாதிபதி நாசரை சந்தித்தார்

Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 106
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் வைகாசி 15 ரபி;அவ் 11 புதன்கிழமை [28-5-69]

### வடபகுதி பௌத்த பாடசாலைகள் விவகாரம்

# சர்வகட்சி மகாநாட்டுக்கு தீவுப்பகுதி எம். பி. மறுப்பு

## 'தமிழரசுக்கட்சி தாமதித்துவிட்டது' என்கிறார் திரு. நவரத்தினம்

யாழ்ப்பாணம், புதன்

**வடபகுதிப் பௌத்த பாடசாலைகள்விவகாரமாக அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்துவதற்காக இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவிருக்கும் சர்வகட்சி மகாநாட்டுக்கு சமுகம் கொடுக்குமாறு தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. விடுத்த அழைப்பை தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் நிராகரித்துள்ளார்.**

தமிழ்ப் பாடசாலைகளுக்கு இந்த நிலை ஏற்பட தமிழரசுக்கட்சியே முழுக்காரணம் என்று சுட்டிக்காட்டி கடிதமொன்றை அவர் திரு. அமிர்தலிங்கம் எம். பி.க்கு அனுப்பிவைத்துள்ளார்.

தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தாய் மொழியே போதனமொழி என்பதை கல்வி அமைச்சரும், பிரதமரும் ஏற்றதோடு இது கல்வி வெள்ளை அறிக்கையிலும் [illegible] சதி எண்ணத்தினலென்பதையும்; சைவமக்களை படிப்படியாக மதம்மாற்றும்எண்ணத்துடன் எடுக்கப்பட்ட பூர்வாங்க நடவடிக்கை என்[illegible]யும் தமிழரசுக்கட்சி அ[illegible]யாமலிருந்திருக்க முடியாது.

அரசாங்கம் இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்பது [illegible] [illegible]டுக்கொடுத்து விட்டது.

இப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதைத் தமிழரசுக்கட்சி எதிர்க்கவில்லையென்றும் அதற்கு ஒப்புக் கொடுத்திருப்[illegible]கவும் திரு. அமிர்தலிங்க[illegible]பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையிலிருந்து காணக்கூடியதாக இருந்ததாகவும் இந்த [illegible] வெறும் அரசியல் [illegible]பாட்டுக்காகக் [illegible]டும் ஆலோசனைக்கூட்ட[illegible] [illegible]

## சிறையிலிருந்து தப்பியவர் மீண்டும் திருடினராம்
### பொலிஸிடம் அகப்பட்டார்

யாழ்ப்பாணம், புதன்

சிறையிலிருந்து தப்பிச் சென்ற 15 வயதுச் சிறுவனைக் கைது செய்யச் சென்ற பொலிஸாருக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. குறிப்பிட்ட சிறுவன் அந்த வீட்டிலிருந்தும் தங்கச் சங்கிலிகள், காப்புகள், மணிக்கூடுகளையும், ரொக்கப்பணத்தையும் களவாடிக் கொண்டு போய்விட்டதாகப்பின்னரே தெரியவந்தது.

பாலைதீவுத் திருவிழாவின் போது தங்கச்சங்கிலியையும் 250 ரூபா ரொக்கப்பணத்தையும் களவாடிய தென்ற குற்றச் சாட்டில் இராஜரத்தினம் (15 வயது) என்ற சிறுவன் அச்சுவேலியில் சிறுவர் நன்நடத்தைப் பாடசாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தான்.

ஒருவார காலத்துக்கு முன்னர் இச்சிறுவன் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சிறுவன் கரையூரில் இருந்த வீட்டுக்குப் பொலிஸார் சென்றபோது இந்தத் தகவல் பொலிஸாருக்குக் கிடைத்தது.

சிறையிலிருந்து தப்பிவந்த பின்னரே சிறுவன் இவ்வீட்டிலிருந்து 7 பவுண் தங்கச் சங்கிலி, ஒரு சோடி காப்பு, மணிக்கூடுகள், 350 ரூபா ரொக்கப்பணம் ஆகியவற்றைக் களவாடிச்சென்றதாக பொலிஸில் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தா. நி)

## கெய்ரோவில் குதூகல வரவேற்பு; ஜனாதிபதி மாளிகையில் திரு. டட்லி

கெய்ரோ, மே 27

**பிரதமர் திரு. டட்லிசேனநாயகா இன்று இரவு ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி நாஸரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இருதலைவர்களும் மிகவும் மனம்விட்டுப்பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.**

இலங்கை-ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய இரு நாடுகளும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் குறித்தும் முக்கியமாக இவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினர்.

பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவுக்கு விசேஷ கௌரவம் அளிக்குமுகமாக ஜனாதிபதி நாஸர் தமது உத்தியோகபூர்வமான ஜனாதிபதி மாளிகையில் திரு. டட்லி தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

நாஸர் தற்போது தமது சொந்த இல்லத்திலேயே வசித்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. டட்லிக்கு ஜனாதிபதி நாஸர் இன்று இரவுவிருந்தளித்தார். பிரதமர் டட்லி நாளை அஜிவான் அணைக்கட்டையும் மற்றும் பல முக்கிய இடங்களையும் பார்வையிடுவார்.

### குதூகலவரவேற்பு

இன்று பிற்பகல் பிரதமர் திரு. டட்லி இங்கு விமானமூலம் வந்திறங்கியபோது அவருக்கு விமான நிலையத்தில் குதூகலவரவேற்பளிக்கப்பட்டது.

21 தடவைகள் பீரங்கிகள் முழங்கின. ராணுவ மரியாதைகளைப் பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

விமானநிலையத்தில் ஐ. அ. குடியரசின் பிரதமர் ஜனப் அப்துல் அஸிஸ் கமால் மற்றும் அமைச்சர்கள் பிரதமர் டட்லியை எதிர்கொண்டு வரவேற்றனர்.

ஐ. அ. குடியரசியல் இலங்கைத் தூதுவராகவிருக்கும் மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாருவும் இலங்கை யுவதிகளும் பிரதமருக்கு மலர்மாலை சூட்டி விமான நிலையத்தில் வரவேற்றனர்.

விமானநிலையத்திலிருந்து பிரதமர் சென்ற வழியெல்லாம் மக்கள் திரண்டு நின்று ஆனந்த வரவேற்பளித்தனர். வீதிகளின் இருமருங்கும் இலங்கையின் தேசியக் கொடிகளால்அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஐக்கிய அரபுக்குடியரசு பிரதான பத்திரிகையான 'அல் அஹராம்' பிரதமர் விஜயத்தை யொட்டி சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருந்தது. இதன் ஆசிரிய தலையங்கத்தில் இலங்கையின் மண்டலசார்பற்ற கொள்கைக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் திரு. டட்லி 4 இன்னும் நாட்கள் இங்கு தங்கியிருப்பார்.

## பயனற்ற பொருட்கள் மூலம் கைத்தொழில்களை நிறுவலாம்
### கோப்பாய் எம் பி யோசனை

மட்டுவில், செவ்வாய்

"எமது நாட்டில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டே சிறுசிறு கைத்தொழில்களைச் செய்து, நம் கையே நமக்குத் துணை என்று தான் நம்பிக்கையுடனும் சுயமரியாதையுட்னும் நமது மக்கள் வாழப் பழகிக்கொள்ளவேண்டும்."

மேற்கண்டவாறு கைதடி நுணுவில் மகாத்மா கைப்பணிப் பொருட்காட்சி நிலையத் திறப்புவிழாவில் பேசிய கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

சாவகச்சேரி எம். பி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து கூறியதாவது:

"மலேஷியாவில் பரந்திருக்கும் சின மக்கள் எத்துணை கல்வி கற்றிருந்த போதிலும் அவர்கள், அரசாங்க உத்தியோகம்பார்க்க [illegible]

மட்டுவிலுக்கு மின்சார விநியோகம் விரைவில் கிடைக்கும் வழியை நான் செய்வேன் இதற்காக, இன்னெரு பகுதியால் மின்சார விநியோக இணைப்பை நீட்டுவதை நாம் தடுக்க முன்வருவது, எமது ஒற்றுமை இல்லாதன்மையை எடுத்துக் காட்டும் என்றார்.

தென்மராட்சி மாதர் முன்னணித் தலைவி திருமதி இராஜ பூபதி அருணாசலம்' கிராம சபைத்தலைவர் திரு. சுப்பையா, திரு. ஏ. ஜெயரத்தினம் ஆர். டி. ஒ. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிலையத் தலைவர் திரு. ஆர். சரவணமுத்து நன்றியுரை நிகழ்த்தினர்.

## எஸ் ஜே வி, வி. பி. மறுப்பு

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பற்றியும் வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பற்றியும் ஆங்கில மாலைத் தினசரியொன்றில் வெளிவந்த செய்தியை இருவரும் மறுத்துள்ளனர்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம் அடுத்த பொதுத் [illegible] னம்பலம் மறுத்திருக்கிறார்.

"என்னைத் தமிழரசுக் கட்சியினர் காங்கேசன்துறைத் தொகுதியில் தமது கட்சியில் போட்டியிடும்படி கேட்டதாக வெளிவந்த செய்தி ஆதாரமற்றது. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த எவரும் என்னை காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிடுமாறு கேட்டதும் கிடையாது. தமிழரசுக்கட்சிக்கோ, [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250 ரூபா ரொக்கப்பணத்தையும் களவாடிய தென்ற குற்றச் சாட்டில் இராஜரத்தினம் (15 வயது) என்ற சிறுவன் அச்சுவேலியில் சிறுவர் நன்நடத்தைப் பாடசாலையில் பாதுகாப்பில் ... ரொக்கப்பணம் ஆகியவற்றைக் களவாடிச்சென்றதாக பொலிஸில் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி)

## "ஆசிரியர்களுக்கு ஒரே சங்கம் வேண்டும்"

பருத்தித்துறை, செவ்.

"அகில இலங்கையிலுமுள்ள ஆசிரியர் ஒரே கொடியின்கீழ் திரண்டு ஒரே குரலில் தமது கோரிக்கைகளை முன்வைத்தால் மட்டுமே ஓரளவுக்காவது பயன் ஏற்படும். சாதாரண தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்குச்செவிசாய்க்கும் அரசாங்கம் ஆசிரியரை அரசியல் உருட்டுக்காய்களாகத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்துநிறுத்தவேண்டுமாயின் ஆசிரியரிடையே ஒற்றுமை உணர்ச்சி பெருக வேண்டும்."

இவ்வாறு நேற்று மாலை புலோலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடந்த வடமராட்சி ஆசிரியர் சங்க ஆண்டு விழாவில் தலைவர் திரு. ஏ. சின்னத்தம்பி தமது தலைமைப்பேருரையில் கூறினார்.

இளைப்பாறிய ஆசிரியர்களான திருவாளர்கள் ஆர். எம். குணரத்தினம், அந்தனி இராசையா ஆகியோரின் சேவை நலத்தை திருவாளர்கள் இ. மகேசன், கே. சத்தியமூர்த்தி. த. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

—

## "சைவ குருமாருக்கு பல்கலைக்கழகம் நிறுவுக"

அளவெட்டி, செவ்.

"சைவ அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த சைவக் குருமார்களை உருவாக்குவதற்கு வேண்டிய கல்வியையும், பயிற்சியையும் கொடுப்பதற்கு ஓர் உயர்தர சைவக் குருமார் பயிற்சிப் பாடசாலை விரைவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டும்" என்று அரசாங்கத்தை கோரும் தீர்மானமொன்று இம்மாதம் 29-ம் திகதி கீரிமலை சிவன் ஆலயத்தில் நிகழும் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை இரண்டாவது ஆண்டு மகாநாட்டில் நிறைவேற்றப் படவிருக்கிறது.

...

தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தாய் மொழியே போதனா மொழி என்பதை கல்வி அமைச்சரும், பிரதமரும் ஏற்றதோடு இது கல்வி வெள்ளை அறிக்கையிலும் இடம்பெற்றிருக்கும் இவ்வேளையில் பிரதமர் டட்லியும், கல்வி அமைச்சரும் வடபகுதி பௌத்த பாடசாலை விவகாரத்தில் எடுக்கும் நடவடிக்கையை சகல தமிழ் மக்களும் ஏகோபித்து எதிர்க்க வேண்டுமென்றும் இதற்காகவே சர்வ கட்சி மாநாடு கூட்டப்படுகின்றதென்றும் திரு. அமிர்தலிங்கம் எம். பி. தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

அழைப்பை நிராகரித்த தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் இதற்குப் பதிலாக திரு. அமிர்தலிங்கத்துக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

தங்கள் கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ள இந்த நிலைமைக்குத் தமிழரசுக்கட்சி மட்டுமே பொறுப்பென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

இந்த மூன்று பாடசாலைகளினதும் தோற்றச் சரித்திரத்தைப் பார்க்கும்போது இது சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நன் நோக்கத்தினால் அரசாங்கம் செய்ததல்ல என்பதும் தமிழ்மக்களைப் பிரித்தாளும் ... யாது.

அரசாங்கம் இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்பது ... அரசியல் தந்திரமே. ...கையிலுள்ள முஸ்லிம் ...சாலைகளில் சிங்கள ஆசிரியர்களை அனுப்ப தமிழரசுக்கட்சி அனுமதி கொடுத்தபோதே, இப்போது எதிர்க்க விரும்பும் உரிமையை விட் ...

திரு. அமிர்தலிங்கம் ...த்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையிலிருந்து காணக்கூடியதாக இருந்ததாகவும் இந்த நிலையில் வெறும் அரசியல் விளையாட்டுக்காகக் ...டும் ஆலோசனைக்கூட்டம் ...தற்காக என்பது தனக்குப் புலனாகவில்லையென்றும் இக்கடிதத்தில் திரு. நவரத்தினம் குறிப்பிட்டுள்ளார், (கா. நி)

## ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தினர் ஊர்வலம் நடத்துவர்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் பௌத்த பாடசாலைகளில் தமிழ் மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டுமென்றும் அரசாங்கம் கையேற்கையில் இப்பாடசாலைகளில் ஏற்கனவே கடமையாற்றிவரும் ஆசிரியர்களை அரசாங்கசேவையில் நிரந்தரமாக்கவேண்டுமென்றும் அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கமாக ஈழத்தமிழ் இளைஞர் இயக்கத்தினர் நாளைக் காலை குழப்பிட்டிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கட்டடம் வரை ஊர்வலம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

நாளை மறுதினம் நடைபெறவிருந்த இவ்வுத்தேச ஊர்வலத்துக்கு பொலிசார் தடைவிதித்திருந்தனர் எனினும் பின்னர் இதற்கான தடையை நீக்கி நாளை ஊர்வலத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

சியவசசுவீப் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனவும் இவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவிருகிறார்கள். ஊர்வலம் காலை 8 மணிக்குப் புறப்படவிருக்கிறது.

ஊர்வலத்தின் பின்னர் வை. எம். சி. ஏ, மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் குறிப்பிட்ட இயக்க உறுப்பினர்கள்பேசுவார்கள். அரசியல் தலைவர்கள் எவரும் இதற்கு அழைக்கப்படவில்லையென இயக்கத்தின் பத்திரிகைக்குழு உறுப்பினர் திரு. செ. சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.

...வேலுப்பிள்ளை தொடர்ந்து கூறியதாவது:

"மலேஷியாவில் பரந்திருக்கும் சீன மக்கள் எத்துணை கல்வி கற்றிருந்தபோதிலும் அவர்கள், அரசாங்க உத்தியோகம்பார்க்க விரும்புவதில்லை. இன்று நம் நாட்டில் எத்தனையோ மூலப் பொருட்கள் பயனற்றுகிடக்கின்றது. இவற்றை பயன்படுத்துவதற்கான சிந்தனையும், ஊக்கமும், முயற்சியும் எமது மக்கள் எடுப்பின், எவர் கையையும் எதிர்பாராமல் கௌரவமாக வாழமுடியும்.

திரு. வி. என். நவரத்தினம் தலைமையுரையில், "நாம் என்றும் எமது சுய கௌரவத்துடனும், தன் நம்பிக்கையுடனும் வாழமுடியும் என்பதற்கு இந்த மகாத்மா கைப்பணி நிலையம் ஒரு எடுத்துக்காட்டு. நமது மக்கள் எமதுநாட்டை முன்னேறச்செய்ய முனைவது அவர்கள் முக்கிய கடமை, அதேவேளையில் அதே ஊரில் இன்னொரு பகுதிக்குக் கிடைக்கும் அபிவிருத்தியை தடுத்து தனது இடத்தில் அமைக்கவேண்டும் என்று முயற்சிப்பது தவறு.

... பொன்னம்பலம் பற்றியும் ஆங்கில மாலைத் தினசரியொன்றில் வெளிவந்த செய்தியை இருவரும் மறுத்துள்ளனர்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடமாட்டாரென்று வெளியான அந்தச் செய்தியை திரு. செல்வநாயகம் மறுத்துள்ளார். அதே செய்தியில் தம்மைப்பற்றி வந்த செய்தியையும் திரு. வி. பொன் ... வந்த செய்தி ஆதாரமற்றது. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த எவரும் என்னை காங்கேசன்துறைத் தொகுதிக்குப் போட்டியிடுமாறு கேட்டதும் கிடையாது. தமிழரசுக்கட்சிக்கோ, அன்றி வேறு கட்சிக்கோ மாறும் நோக்கம் கிடையாது. இதுபற்றி ஆங்கிலத் தினசரியில் வந்த செய்திக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது"

( 4-ம்பக்கம் பார்க்க )

## 'வட இலங்கை நெசவாசிரியர் சங்க மொன்று இல்லை'

யாழ்ப்பாணம், புதன்

"வட இலங்கை நெசவாசிரியர் சங்கமொன்று கிடையாது. இலங்கை ஐக்கிய நெசவாளர் சங்கம் மட்டுமே பதிவு செய்த சங்கமாக இயங்குகிறது. அந்தச் சங்கத்தின் காரியதரிசியான நானும் தலைவரும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை சந்தித்து அடுத்த மாதம் முதல் சிங்களத் தேர்ச்சியின்மைகாரணமாக வேலை இழக்கவிருக்கும் 27 நெசவாசிரியர் பிரச்னை குறித்து நடவடிக்கை எடுக்கும்படி கோரினோம். அவர் அமைச்சருடன் இதுபற்றி தொடர்பு கொண்டுள்ளார். நெசவாசிரியர் வேலைநீக்கம் பின்போடப்பட்டுள்ளதாகவெளிவந்த செய்தி பற்றி நமக்கு எதுவுமேதெரியாது" என்று இலங்கை ஐக்கிய நெசவாளர் சங்கக் காரியதரிசி திரு தம்பையா தெரிவித்துள்ளார்.

# 'பெற்றோர் விருப்பம் அறிந்து முடிவு செய்யப்படும்'

## எந்த நிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயார்

### செனட்டில் நீதிஅமைச்சர்

கொழும்பு, செவ்.

வடபகுதி பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கும் விவகாரத்தில் யாரும் அரசியல் லாபம் தேட முயற்சிப்பது தவறு என்றும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களின் விருப்பம் பற்றி திட்டவட்டமாக அறிந்தபின் இதுவிஷயமாக அரசாங்கம் முடிவுசெய்யுமெனவும் எந்த நிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் நீதி அமைச்சர் ஏ. எப். விஜயமானே இன்று செனட்சபையில் தெரிவித்தார்.

இவ்வித விஷயங்களில் கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்படுவது வழக்கமென்றும் இதில் வீண் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பது நல்லதெல்லவெனவும் திரு. விஜயமானே மேலும் எடுத்துக் கூறினார்.

செனட்டர்றெஜிபெரேராவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செனட்டர் பெரேரா, 5 லட்சம் ஹரிஜனர்கள் உயர் சாதியினரால் கொடுமைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்களென்றும் இக்கொடுமைகள் தாங்காது ஹரிஜனர்கள் பௌத்தர்களாகமாறி சிங்களத்தைப் போதனுமொழியாக ஏற்றுக்கொள்ளவிரும்புகிறார்களென்றும் கூறி, இதில் தமிழரசுக்கட்சிதமிழ் காங்கிரஸ் தலையிட்டு அரசியல் சண்டித்தனம் நடத்திவருகின்றனவென்றும் இதற்கு அரசாங்கம் பணிந்துவிட்டதா என்றும் கேட்டார்.

## யாழ். இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்த முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

பத்தொன்பது கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம்இ.போ.ச. டிப்போவை சேர்ந்த 6 தொழிற்சங்கங்கள் அடுத்தமாதம் 4ந் திகதிக்குப் பின்னர் வேலைநிறுத்தம் செய்வதெனநேற்று முடிவுசெய்துள்ளன.

27-5-69ல் இ.போ.ச. அதிகாரிகளுக்கும் 6 தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் 19கோரிக்கைகள் சம்பந்தமாக நடந்த மகாநாட்டில் முதலாவது கோரிக்கையான 19-3-68ல் நடந்த வேலைநிறுத்தத்துக்குக் காரணமாகவிருந்த அதிகாரிகளை இ.போ.ச. தண்டிக்காதது காரணமாகவும், அப்பிரச்னை சம்பந்தமாக சுமுகமான முடிவு ஏற்படாததன் காரணமாகவும் 4-6-69க்கு முன்னர் 18-3-68ல் நடைபெற்ற வேலை நிறுத்தம்பற்றிய விளக்கக்குறிப்புப்பிரதி தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்படாவிட்டால் 4-6-69க்குப் பின்னர் வேலைநிறுத்தம்செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

அகில இலங்கை மோட்டார் தொழிலாளர்சங்கம், இலங்கை பஸ் தொழிலாளர் கழகம், தேசிய தொழிலாளர் சங்கம், ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கம், லங்கா மோட்டார் பிரதிவாய சமத்திய, இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம்ஆகியஇந்த6தொழிற் சங்கங்களும் இதில் கலந்து கொண்டன,

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா

# வீடு தோறும் இதுவே பேச்சு; வீதி எங்கும் ஓட்டப் பயிற்சி

## 'ஈழநாடு'வெற்றிக்கிண்ண 26 மைல் மரதன்

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடைபெறும் 26 மைல் மரதன் ஓட்டப் போட்டியே சகல இளைஞர்கள் மத்தியிலும் ஒரே பேச்சாகவிருக்கின்றது.

தினசரி காலையிலும் மாலையிலும் வீரர்கள் இதற்கான ஓட்டப்பயிற்சியில் ஈடுபட்டிருப்பதை நகர வீதிகளில் காணக்கூடியதாகவிருக்கின்றது.

சிறுவர், சிறுமியர், கல்லூரி மாணவர், இளைஞர், யுவதிகள், பெரியோர், முதியோர் உட்பட சகலர் மத்தியிலும் வீடுகள் தோறும் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழாபற்றியே பேச்சாக இருக்கின்றது.

ஜூன் 12-ம், 13-ம், 14-ம் திகதிகளில் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறுகின்றது. முதல் இரண்டு நாட்களும் கல்லூரிகளும், விளையாட்டுக்கழகங்களும் சனசமூக நிலையங்களும், கிராம முன்னேற்றச்சங்கங்களும் கலந்துகொள்ளும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

இறுதிநாளான 14-ம்திகதி காலையில் 26 மைல் மரதன் ஓட்டப் போட்டி நடைபெறும். இப்போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் 'ஈழநாட்டில்' இதற்கென வெளிவரும் விண்ணப்பபத்திரத்திலேயே விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

தினசரி இதற்கான விண்ணப்பங்கள் வந்துகொண்டிருப்பதோடு, வீரர்களும் இதற்கான பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதை வீதிகளில் காணக்கூடியதாகவிருக்கின்றது.

இப்போட்டியில் முதலிடம் பெறும் வீரருக்கு 'ஈழநாடு' ஸ்தாபனத்தால் வழங்கும் வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் ஜூன்5-ம் திகதிக்கு முன்னர் 'ஈழநாடு', த. பெ. எண். 49, சிவன்கோவில் மேலைவீதி. யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

போட்டிப்பாதை, விதிகள் பற்றிய விபரங்கள்'ஈழநாட்டில்' தொடர்ந்து வெளிவரும்.

### கரபந்தாட்டம்

விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கும் இப்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்களும் ஜூன் 5-ந் திகதி வரையுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

சுற்றுப்போட்டிகள் ஜூன் 7-ந் திகதியளவில் ஆரம்பமாகும். இறுதிச் சாம்பியன் போட்டி ஜூன் 12-ம்,13-ம் திகதிகளையொட்டி நடைபெறும். (கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி ஒழுங்கையில் இரண்டு பரப்பு. ரூபா பதினெண்ணாயிரம். விபரங்களுக்கு, 45, புங்கங்குளம் ரோட், யாழ்ப்பாணம். 1156

நல்லூர் — கோவில் வீதியில் (Temple Road) திருநெல்வேலி சிவன்கோவில் ரோட்டு சந்திக்கும் சட்டநாதர் ரோட் சந்திக்கும் இடையில் 5 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு T. S. கந்தையா, சட்டநாதர்ரோட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். அவர்களிடம் தொடர்பு கொள்ளவும். 1155


**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 10-30 மணி
ஜெமினி - பத்மினி
நடித்த
**மீண்ட சொர்க்கம்**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடித்த
**சாரதா**
(புதிய கொப்பி)

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
**காதல் படுத்தும் பாடு**

வல்வெட்டித்துறை
**ரஞ்சனு தியேட்டர்**
ஜெய்சங்கர் - விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க**

**ராஜா** 135 வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**


## ஊர்காவற்றுறைப் பட்டினசபை

## கேள்விவிளம்பரம்

1969ம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி மாலை 3 மணிவரை பட்டினசபைத் தலைவரால் கீழ்க் குறிக்கப்படும் வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கலிச்சசாலம்பை வீதிக்குக் கல் பரவித் தாரிடுதல்.
2. மண்குழி ஒழுங்கைக்குக் கல் பரவித் தாரிடுதல்.

மற்றும் விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். இம்மானுவேல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபைக்காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
25-5-1969. 1586

## மாவுகப்பலில் வேலை துரிதம்

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்திருக்கும் மாவுக் கப்பலில் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது.

சுமார் 9,000 தொன் மாவை அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வந்த மாவுக் கப்பல் வேலை இன்னும் 8 நாட்களில் முடிவடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இக் கப்பல் வேலையை யாழ். மாவட்ட துறைமுகத் தொழிலாளர் சமாஜம் செய்து வருகிறது.


**MANOHARA**
**JAFFNA**
Daily 6-30, 10-00 P.M.
Asoka Ponnamperuma,
Vijitha Mallika
in
LONDON HAMU
(Sinhalese)

**REGAL** at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-Poya 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
**ADIOS GRINGO**


## வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால், யாழ். பாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' 'பி' பிரிவு விளையாட்டுக் கோஷ்டியும், 'சிங்கிங்பிஸ்' விளையாட்டுக் கோஷ்டியும் போட்டியிட்டன.

இப் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் மிகவும் பலமாகவே மோதிக்கொண்டன. இடைவேளைக்கு முன் கிறீன்பீல்ட் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டனர். இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின் ஆட்டம் மிக கவர்ச்சியாக இருந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும் போதே இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு (1—1) கோல்களைப் போட்டனர். கிறீன்பீல்ட் கோஷ்டியின் சார்பில் சில்வெஸ்டரும், சிங்கிங்பிஸ் கோஷ்டியின் சார்பில் ரஜனும் கோல்களைப் போட்டனர்.

சமமாக முடிவடைந்த இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே நி)

## நாடக விழா

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய கட்டட நிதிக்காக கலாஜோதி நாடக மன்றத்தார் அளிக்கும் நாடகவிழா நாளை மாலை நிலையத் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. எஸ். ஐ. அசீஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழா வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

(கா. நி

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி செவ்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்க வவனியா கிளை வருடாந்த பொதுக்கூட்டம் வவ

# இன, மத ஒற்றுமைக்கு ஒரு முன் மாதிரி

### பாடசாலை பரிசளிப்பில் கல்வி அதிகாரி பாராட்டு

ஆனையிறவு, செவ்.

"வடமாநிலத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய நாலின மக்களும் இந்து, கிறீஸ்தவ, புத்த, இஸ்லாமிய நாற் சமயத்தவரும் ஒரே பாடசாலையில் ஒற்றுமையோடு கல்வி கற்கும் புதுமையை ஆனையிறவு தமிழ் சிங்க வித்தியாலயத்தில் காண்கின்றோம் இங்கு தமிழும், சிங்களமும் ஆங்கிலமும் கற்று இம் மாணவர் அடைந்துள்ள தேர்ச்சி கண்டும் விளையாட்டுப் போட்டியின் போதும் கலை நிகழ்ச்சியின் போதும் இப்பாடசாலை மாணவர் பேதமின்றி இலட்சியத்தோடு பங்குபற்றியதையும் கண்டு மகிழ்கின்றேன். தேசிய ஒருமைப்பாட்டிற்கு இப்படியான பாடசாலை எடுத்துக்காட்டாகும்." என்று ஆனையிறவு அ. த. சி. வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி உரையாற்றிய கல்வி அதிகாரி திரு நா. துரைசாமி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி காரியாதிகாரி திரு. யோகநாதன் விழாவிற்குத் தலைமைவகித்தார்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். வடமாநில கல்வி ஆலோசகர் திரு. க. கனகசபாபதி விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். பளைக் கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. இராசசூரியரும், உப்பளம் உற்பத்தி முகாமையாளர் திரு. ஆர். ஆர். எஸ் நல்லையாவும் பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. ஆ. மார்க்கண்டு கிராம சேவையாளர், சிங்கள ஆசிரியர் எம். ஆர். நவரத்தின ஆகியோரும் பேசினர். தலைமை ஆசிரியர் அ. க. இராசேந்திரம் பாடசாலையின் தேவைகளை எடுத்துரைத்தார் பொருளாளர் திரு. வே. பொன்னுத்துரை நன்றியுரை கூறினார்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில் மஞ்சள் இல்லம் 1ம் இடத்தையும் சிவப்பு இல்லம் 2ம் இடத்தையும் பச்சை இல்லம் 3ம் இடத்தையும் பெற்றன. இப்பாடசாலை வரலாற்றில் இவ்வருடமே முதன் முதல் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது,

## இன்றைய பலன்

28-5-69

வைகாசி மாதம்

15-ம் திகதி

புதன்கிழமை

திதி- துவாதசி. இரவு 12-47 மேல் திரயோதசி

நட்சத்திரம்- சித்திரை இரவு 10-40மேல் சுவாதி

ராகுகாலம்- 11-52—1-22.

சுபநேரம்- 4-22—5-52.

இன்று பிறந்தவர்களுக்கு: விவசாயிகளுக்கு வெற்றிக்குரிய நல்லாண்டாகும். தானிய விருத்தியும் தனச்சிறப்பும், உத்தியோகத்தர்களுக்கு சில முன்னேற்றமும் உண்டு. சிலர் அருமையான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடலாம். பொறுமை நன்று. குரு தொழில் புரிவோர்க்குப் பொன் சேரும்புதுமையான ஆண்டாகும்.

மேஷம்- சமரசப் பேச்சு, சந்தோஷமுண்டு

ரிஷபம்- செய்தொழில் பங்கம், விழிப்புடனிரு

மிதுனம்- பெற்றோர் உதவி, பெருமையும் ...ரும்.

கடகம்- பொருட் செலவு, பொதுத்துறை நாட்டம்

சிம்மம்- அதிகார அனு...லம், அக மகிழ்ச்சி.

கன்னி- பிணக்கு வரும்

## மீலாத்சங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம் புதன்

மன்பஉல் உலூப் ... (மதுறஷா முஸ்லிம் பா...லை) மீலாத் விழா சங்கத்தினர் வழமையாக நடாத்தி வரும் நண்பகல் விருந்தினை இம்முறையும் நடத்துவதென்று தீர்மானித்தனர்.

சென்ற வருடங்க... அவ

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 28—5—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 படப்பாட்டு, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச் சுருக்கம்.

## காங்கிரஸ் கிளை

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவு வடக்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கிளை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ்தலைவர் திரு. பொன்னம்பலம், அட்வக்கேட் திரு. என். சி. சிவஞானம் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**ஈழநாடு' பத்தாண்டு நிறைவுவிழா**

# 26 மைல் மரதன் ஓட்டம் (14—6—69)

## விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ..................................

விலாசம்
..............................
..............................

வயது: ..............................
1—6—69

..............................
கையொப்பம்

## போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத் தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜூன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் மாதம் 5-ம் திகதிக்குமுன் 'ஈழநாடு', த. பெ. எண்-49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.


**சளி சுரத்திற்கு துரிதமான வன்மையான**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா 13 வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்



Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-Poya 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
**ADIOS GRINGO**
(Adults only)



இன்று முதல் குதூகல ஆரம்பம்
**யாழ். ராணி திரையில்**
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
எஸ். வரலட்சுமி, நாகேஷ், கிருஷ்ணகுமாரி
நம்பியார், முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
கைவண்ணத்தில் உருவான
மற்றுமோர் சித்திரம்
**உயிரா? மானமா?**



3-வது வெற்றி வாரமாகக்
காட்சியளிக்கின்றது
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ்
அசோகன் - கீதாஞ்சலி
நடித்த
**அதே கண்கள்**



இன்றுமட்டும்
இங்ஸ்லி (கொழும்பு) திரையில்
நாகேஷ் - சுந்தர்ராஜன்-வசந்தா- மனேரமா
நடித்த
**ஆலயம்**



நாளை முதல்
இங்ஸ்லி (கொழும்பு) மைலன் (ஹிந்துப்பிட்டி)
ஸ்ரீ கிருஷ்ணு (திடுமலை) விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படவிருக்கின்றது
ஜெய்சங்கர் (ஜேம்ஸ்பொண்ட்) - ஜெயலலிதா (ஆடலழகி)
நாகேஷ் - மனேரமா - சோ
நடித்து வெளிவரவிருக்கும்
**பொம்மலாட்டம்**


## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி செல்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்க வவனியா கிளை வருடாந்த பொதுக்கூட்டம் வவனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது பின் வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வித்துவான் சிவப்பிரகாசம், உபதலைவர்கள்: திருவாளர்கள் அ. கந்தசாமி, க. தையல்முத்து, காரியதரிசி: திரு. மு. நடராசா, உபகாரியதரிசி: திரு. நடாகமாத்தா, தனுதிகாரி: திரு. குமரேசையா, உபதனுதிகாரி: திரு. குமாரசாமி, கணக்குப்பரிசோதகர்: திரு. குமாரசாமி.

நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

...ரும்.

கடகம்- பொருட் செலவு, பொறுத்துவுற நாட்டம்.

சிம்மம்- அதிகார அனுலம், அக மகிழ்ச்சி.

கன்னி- பிணக்கு வரும் பிரிவுக்கு இடமுண்டு.

துலாம்- இல்லத் துயர் இதய பாரம்.

விருச்சிகம்- தொழில் சீர்பெறும், ஆனந்தநிலை.

தனுசு- சிநேகிதபீடை, சிறுமையும் சேரும்.

மகரம்- சுற்றம் வாழ்த்தும், சுகபோக நாள்.

கும்பம்- வீறு நடைபோடு, வெற்றி உனக்கே.

மீனம்- ஆயுத பலன், அவதானம் வேண்டும்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

...மீலாத் விழா சங்கத்தினர் வழமையாக நடாத்தி வரும் நண்பகல் விருந்தினை இம் முறையும் நடத்துவதென்று தீர்மானித்தனர்.

சென்ற வருடங்களி... அவதானித்த அன்பர்க... கூறிய ஆலோசனைகளும் புத்திமதிகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் இலேசான வழிமுறைகளையும் கையாளுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

விருந்து வைபவத்தினில் பாடசாலைச் சிறுவர் சிறுமியர்களும் கலந்து கொள்வதினல் இடநெருக்கடியையும் பாதுகாப்பையும் தேடுவது முக்கியம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. எனவே பாடசாலைப்பிள்ளைகள் தனிப்பட்ட இடத்தில் விருந்து பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும்.

(மு. நி)


BAYER CASSELLA BASF 1865

அழியாத சகலநிற சாயப் பொருள்களும்
சாய ரசாயனங்களும்
ஜவுளிகளைக் குறைந்த செலவில் சுலபமாக
சாயம் ஊட்டவும் அச்சடிக்கவும்

உ. கந்தவை

சாயம் ஊட்டல்: இன்டன்த்றென் — வற்
லெவாபிக்ஸ்-இ — றீ அக்ரிவ்

அச்சடித்தல்: அக்ரமின் — பிக்மென்ற்
ஹெலிஸறின் — பிக்மென்ற்
லெவாபிக்ஸ்-பி — றீ அக்ரிவ்
சொலிடாஸொல் — றீ அக்றிவ்

இருப்பிலிருந்து கிடைக்கும்
விபரங்கட்கு:

HAYLEYS
**ஹேலீஸ் லிமிட்டட்**
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10. தொலைபேசி: 96333



# துரிதமான வன்மையான நிவாரணம் தருவது
# டிஸ்பிரின்



டிஸ்பிரின், சளி சுரம், காய்ச்சல், தடிமல் முதலியவற்றின் தொல்லையிலிருந்து விரைவாக நிவாரணம் தருகிறது. டிஸ்பிரின் உட்கொண்டதும் உங்கள் காய்ச்சல் இறங்கும். சளி சுரத்தால் வரும் தலைவலியிலும் உடம்பு வலியிலுமிருந்து துரித நிவாரணம் கிடைக்கும்.

டிஸ்பிரின் துரித நிவாரணம் தரக் காரணம், இரத்தத்தில் அது விரைவாகச் செறிவதை உறுதி செய்யும் அதன் விசேஷ சேர்வை முறை. அதையொத்த கரையாத மற்ற மருந்துகள் போலன்றி டிஸ்பிரின் விரைவாகக் கரைகிறது. ஆகையால் அபாயகரமான கரையாத துகள்களை அது வயிற்றில் விட்டுவைப்பதில்லை. அதனுல் தான் டிஸ்பிரின் பாவிப்பதற்கு மிகப் பாதுகாப்பானது.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அது, அதிக பாதுகாப்பானது. அதிக வன்மை வாய்ந்தது. அதிக துரிதமாகச் செயலாற்றுவது.

சளி சுரத்திலிருந்து துரிதமான நிவாரணம் பெற, இரண்டு டிஸ்பிரின் மாத்திரைகளை நீரில் கரைத்துப் பருகுங்கள்; அல்லது விழுங்குங்கள்.

P 7488 றெக்கிட அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் மனிதன் இறங்கும் நாள் நெருங்கி வந்துவிட்டது

## 'அப்பல்லோ-10' சாதனைபற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் மகிழ்ச்சி

ஹவுஸ்டன், மே, 27

சந்திரனில் மனிதன்போய் இறங்குவதில் இனி எதுவித தடையும்இருக்காது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் இப்பொழுது கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் அப்பலோ 10 விண்கலம் சந்திரதரையின் மிகஅருகில் சென்று வரலாற்றுப் புகழ்மிக்க சாதனையைப் புரிந்தபின் பூமிக்கு மிகவும் பவுத்திரமாகத் திரும்பியிருப்பதைத் தொடர்ந்து விண்வெளி விஞ்ஞானிகள் இந்த உறுதியைப் பெற்றிருக்கிறார்கள்.

அப்பலோ-10 விண்கலம் திட்டமிட்டபடி மிகவும் வியக்கத்தக்க முறையில் சாதனைகள் நடத்தியபின் நேற்றிரவு பசுபிக் சமுத்திரத்தில் வந்திறங்கியது. சந்திர மண்டலப் பயணிகளான தோமஸ்டாஃபோர்ட், இயூஜின் சேர்னன், ஜோன் யங் ஆகிய மூவரும் தமது எட்டுநாள் பிரயாணத்தின் பின் மிக உற்சாகத்தோடும் திடகாத்திரத்தோடும் இருக்கக் காணப்பட்டார்கள், பூமியிலிருந்து புறப்படும்போது இருந்ததைப் போலவே திரும்பிவந்த பிறகும்- அவர்கள் உற்சாகமாகக் காணப்பட்டனர்,

அப்பலோ - 10 வீரர்கள் தரை இறங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இடத்தில் சரியாக வந்திறங்கினார்கள் தரையில் இறங்குவதில் 25 நிமிடங்கள் மட்டுமே தாமதம் ஏற்பட்டது. மீட்பு கப்பல் இருந்தஇடத்துக்கு சுமார் 3மைல் தொலைவில் விண்கலப்பேழை தரை இறங்கியது. உடனே ஹெலிகொப்டர்கள் பறந்து சென்று வீரர்களைஏற்றி வந்தன அவர்கள் மி வும் உற்சாகத்தோடு திடகாத்திரமாகவும் இருப்பதாக பூர்வாங்க மருத்துவ சோதனை செய்த டாக்டர்கள் கூறினார்கள். அப்பலோ - 10 மீட்புக் கப்பலின் வெகு அருகாமையிலேயே இறங்கியதால் கப்பலில் இருந்த டெலிபிஷன்காமிராக்களின் மூலம் அமெரிக்க மக்கள் அந்தக் காட்சியை நேரடியாகவே டெலிவிஷன்மூலம் கண்டு மகிழ்ந்தார்கள்.

### தடையில்லை

அப்பலோ - 10விண்கலத்தின் சாதனைகள் மிகவும் சிறப்பாக அமைந்து விட்ட விஞ்ஞானிகள் கருதுகின்றனர்,

### நிக்சன் பாராட்டு

அப்பலோ - 10 விண்வெளிவீரர்கள். பூமியில் வந்து இறங்கியவுடனே அதிபர் நிக்சன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து டெலிபோனில் பேசினார். சந்திரப் பிரயாணத்துக்கு தயாராகும் வகையில் நான் இன்னும் இளமையோடு இருப்பதாக நினைக்கிறேன் என்று அதிபர் நிக்சன் குறிப்பிட்டார்.

### சோவியத் விஞ்ஞானி

சோவியத் விண்வெளி ஆராய்ச்சி நிபுணர்களும் அப்பல்லோ-10 சாதனைகளை வெகுவாகப் புகழ்ந்திருக்கின்றனர். விண்வெளி வரலாற்றில் இது ஒரு மகத்தான நிகழ்ச்சி என்று சோவியத் விஞ்ஞானி ஒருவர் பாராட்டியிருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் இதுவொரு மகத்தான வெற்றியென்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் இடைக்கால ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, ...

## செக். வானொலி மன்னிப்பு கோரியது

பிராக், மே 27

செக்கோஸ்லவாக்கியாவை வார்ஸோ ஒப்பந்த நாட்டுப் படைகளும் சோவியத் படைகளும் ஆக்கிரமித்துக்கொண்ட பொழுது தற்பொழுது சிறந்த கம்யூனிஸ்டுகள் என்று வர்ணிக்கப்படும் செக். தலைவர்களைப் பற்றி குறை கூறி ஒலிபரப்புகள் செய்யப்பட்டதற்காக செக்கோஸ்லவாக்கிய வானொலி மன்னிப்புக் கேட்டுள்ளது.

செக்கோஸ்லவாக்கியாவில் சோவியத் எதிர்ப்பு ஸ்தாபனங்கள் மீது கடுமையான நெருக்குதல் இருந்து வருவதையே இது காட்டுவதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

இதற்கிடையில் செக்கோஸ்லவாக்கியாவில் எட்டு தினங்கள் இடம்பெற்ற சோவியத் — செக்கோஸ்லவாக்கிய ராணுவ ஒத்திகைகள் முடிவடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 17-வது விமானம்

மியாமி, மே 27

மியாமியிலிருந்து நியுயோர்க்கிற்கு வந்துகொண்டிருந்த அமெரிக்க விமானமொன்று நேற்று திசை திருப்பி கியூபாவுக்குள் கொண்டு போகப்பட்டது. இந்த ஆண்டில் துப்பாக்கி முனையில் திசைதிருப்பி கியூபாவுக்குள் கொண்டுபோகப்பட்ட 17-வது விமானம் இது. இதில் சுமார் 40 பிரயாணிகள் இருந்தனராம்.



யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரி 10-வது ஆண்டு நிறைவு விழாவில் தொழில்நுட்ப கல்விப்பகுதி உதவி டைரக்டர் ஜெனரல் திரு சில்வா பேசிக்கொண்டிருக்கிறார். திருமதி ... கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி அதி... திரு. நாகலிங்கம் ஆகியோரும் ...த்தில் ...ணப்படுகிறார்கள். படம்: ஏ. வி. எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'விஞ்ஞானத்தை வாழ்க்கையுடன் இணைத்து முன்னேற வேண்டும்''

அளவெட்டி, செவ்.

''மனித சமுதாயம் முன்னேற அன்றாட வாழ்க்கையுடன் விஞ்ஞானத்தை இணைத்துபுதியசகாப்தத்தை ஏற்படுத்த வேண்டும்.''

இவ்வாறு வீமன்காமம் மகாவித்தியாலய விஞ்ஞானக் கழகத்தின் ஆதரவில் நிகழ்ந்த விசேட கூட்டம் ஒன்றில் கலந்துரையாற்றிய ஒன்றில் கலந்துரையாற்றிற சுன்னாகம் ஸ்கந்தவரோதயா முன்னாள் ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் கூறினார்.

செல்வன் வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில்:—

இன்று எமது அன்றாட வாழ்க்கையுடன் விஞ்ஞானம் வளரவில்லை. இந்நிலை மாறி வாழ்க்கையுடன் விஞ்ஞானத்தை இணைத்தால் தான் பெரும் சாதனைகளை ஏற்படுத்த முடியும் இதன் மூலம் தான் வருங்காலத்தில் நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம்

அன்று விஞ்ஞானம் என்றால் என்னவென்று அறியாத பாமரமக்கள் வாழ்ந்தனர் ஆனால்இடையில்விஞ்ஞானிகள் தோன்றிநவீனயுகமொன்றை ஏற்படுத்தி சந்திரமண்டலம் செல்லவும் காரணகர்த்தாக்களாகவும் விளங்குகின்றனர்.

நாம் இன்று நல்லமுறையில் வாழ அருள்புரிபவர் கடவுள் என ஒரு பகுதியினர் கூறுகின்றனர், இது உண்மைதான். ஆனாலும் விஞ்ஞானிகளும் நாம் நல்லாக வாழ நல்ல மருந்துகளையும், நல்ல யுக்திகளையும் எமக்களித்துள்ளனர் என்று கூறினார்.

கழகக் காரியதரிசி செல்வன் ஞா. குகநாதன் நன்றியுரை கூறினார்.

## 2 குழந்தைகள் 3 ருத்தல்

யாழ்ப்பாணம், செவ்.

உரும்பராயைச் சேர்ந்த பெண் ஒருவர் ஒவ்வொன்றும் ஒன்றரை றாத்தல் நிறையுள்ள இரண்டு பெண் குழந்தைகளை நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிரசவித்தார். குழந்தைகள் சுகமாகவே இருக்கின்றன. (கா. நி.)

## சூடான்மந்திரிகள் பதவி ஏற்பு

கார்ட்டூம், மே 27

சூடானில் திரு. அபூபக்கர் அவாதல்லா தலைமையிலான மந்திரிசபை இன்று பதவி ஏற்றுக்கொண்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற புரட்சியின்பின், முக்கிய இடங்களிலும் ...

## 'உலகில் முதலிடம் வகிக்கும் நமதுமார்புசிகிச்சைநிலையம்'

அளவெட்டி, செவ்.

'எமது சங்கத்தின் ஆதரவில் காலியில் குழந்தைகளுக்கென நிறுவப்பட்ட மார்பு சிகிச்சை நிலையம் உலகில் உள்ளசகல நவீன வசதிகள்கொண்ட மார்புசிகிச்சை நிலையங்களில் முதல் இடத்தைப் பெறுகிறது. இது எமது சங்கம் செய்தபெரும் சாதனையாகும்.'

இவ்வாறு அகில இலங்கை க்ஷயரோக நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் திரு. ஜெ. எச். எவ். ஜெயசூரியா வலிவடக்கு க்ஷயரோகத் தடுப்பு இயக்கத்தின் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

வலிவடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல் பற்றிக்ஸ் தலைமையில், தெல்லிப்பழையில் நடந்த இக்கூட்டத்தில் ஜெயசூரியா மேலும் கூறியதாவது:—

20 வருடங்களுக்கு முன் நான் அரசாங்க சேவையில் சேர்ந்தபோது க்ஷயரோகத் தடுப்பு இயக்கத்தை ஆரம்பித்தேன். அப்போது இவ்வியக்கத்தின் மூலம் எப்படி க்ஷயரோக நோயாளருக்கு உதவிசெய்யலாம் என நினைத்தேன். ஆனால் இன்று நான் நினைத்ததில் மேலான பலன் கிடைத்துள்ளது.

நான் முதன்முதல் வெலிசறையிலுள்ள க்ஷயரோகஆஸ்பத்திரிக்குச் சென்றேன். நான் அங்கு நோயாளிகள் பாய் இல்லாமலும், நிலத்திலும் கிடப்பதைக் கண்டேன். உடன் அரசாங்க உதவியுடன் எமது சங்க சார்பில் அந்நோயாளருக்குப் படுக்கை வசதி செய்தேன். இதனால் எத்தனையோ நோயாளிகளின் உயிர் காப்பாற்றப்பட்டது.

அரசாங்கம் க்ஷயரோகம் உள்ளவர்களுக்கும் அவர் குடும்பத்திற்கும் நிவாரணப் பணம் வழங்கியது. ஆனால் நோய் மாறியபின் நிவார...

...திகாரியாக திரு கதிர்காமநாதன் உட்பட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது,

## 12 ஆண்டுகளின் பின் குளிக்கப்போகிறார்

யாழ்ப்பாணம், புதன்

பன்னிரண்டு ஆண்டுகள் குளிக்காமல் இருந்துவருகிறார் என்று கூறப்படும் திருநாவுக்கரசு (ஈழத்து சித்தர்) இம்மாதம் 29-ந் திகதி காலையில் குளிக்கப் போகிறாராம். யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் மூடப்பட்டுள்ள கிணறொன்றைத் திறந்து இவர் குளிக்கவிருக்கிறார்.

## வேலைகள் ஆரம்பம்

காங்கேசன்துறை, திங்.

காங்கேசன்துறை தானியக் களஞ்சிய ஆயம்ப வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இக் களஞ்சியம் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் காங்கேசன்துறை வாடிவீட்டிற்கு அருகில் அமைக்கப் பட்டுவருகிறது.

பல காலமாக தாமதப் பட்டுபின்னர் இக் களங்சிய வேலை ரத்து செய்யப் பட்டுயாழ். மாவட்ட துறைமுகத் தொழிலாளரினதும் உணவு இலாகாவினரதும் தூண்டுதல்காரணமாக மீண்டும் இக் களஞ்சிய வேலை தொடங்கியுள்ளது. இக் களஞ்சியம் காங்கேசன்துறையில் கட்டப்படுவதால் வடபகுதிக்கு கப்பல் தொடர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை. காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அருகாமையில் இக்களஞ்சியம் அமைந்துள்ளதால் ஏற்றுமதி செலவில் அரசாங்கத்திற்கு பெருமளவில் மிகுதி ஏற்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இவ் வேலைகளை யாழ்ப்பாணம் பிரிவு மராமத்து இலாக்காவினர் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

'பஸ் நிலையம் ...

கண்டு மகிழ்ந்தார்கள்.

## தடையில்லை


அப்பலோ - 10 விண்கலத்தின் சாதனைகள் மிகவும் சிறப்பாக அமைந்து விட்டதால் இனி மனிதன் சந்திரனில் போய் இறங்குவதில் எதுவித தடையுமிருக்காது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அடுத்த ஜுலை மாதம் அப்பலோ - 11 விண்கலத்தில் மனிதன் சந்திரத் தரையில் இறங்குவதற்கான திட்டங்கள் மும்முரமாக செயலாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இதுபற்றிய இறுதி முடிவுகள் பற்றி அடுத்த மாதம் 9-ம் திகதிதான் திட்டவட்டமாக அறிவிக்கப்படுமென்று அமெரிக்க விண்வெளி அதிகாரிகள் கூறுகிறார்கள். ஏனென்றால் அப்பலோ-10 வீரர்கள்கொண்டு வந்துள்ள புதிய தகவல்களை மிக நுணுக்கமாக விஞ்ஞானிகள் ஆராய வேண்டியிருக்கின்றது. சந்திரத் தரை பற்றிய அப்பலோ-10 வீரர்கள் சேகரித்துள்ள தகவல்கள் முன்னெப்போதையும்விட விபரமாகவும் தெளிவாகவுமிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தகவல்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்து முடிப்பதற்கு சுமார் இரு வாரங்கள் பிடிக்குமாம், அதன் பிறகே ஜுலையில் மனிதன் சந்திரத் தரையில் இறங்குவது பற்றி முடிவெடுக்கப்படும் ஆனல் மிக விரைவிலேயே மனிதன் சந்திரத் தரையில் இறழுகுவதற்கான சாத்தியங்கள் மிகவும் எளிதாகியுள்ளதாக

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் இதுவொரு மகத்தான வெற்றியென்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் இடைக்கால ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாக்கான், இந்தியப் பிரதமர் திருமதி காந்தி ஆகியவர்களும் தமது பாராட்டுக்களை அமெரிக்க விஞ்ஞானிகளுக்கும் அப்பல்லோ-10 வீரர்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

## பாரசூட் விரிந்தது

அப்பல்லோ 10 விண்கலப் பூமியின் காற்றுமண்டலத்துக்குள் பிரவேசித்தபோது இதுவரை எவரும் பிரயாணம் செய்திராத வேகத்தோடு பாய்ந்துவந்தது அதன்வேகத்தைப்போலவே வெப்பமும் மிகஅதிகமாக விருந்தது. விண்பயணிகள் இருந்த பேழைப்பகுதி கனத்த பிளாஸ்டிக் பூசப்பட்டு எரிந்துபோகாமல் தடுக்கப்பட்டிருந்தது. காற்று மண்டலத்துக்குள் பிரவேசித்தபோது பேழை தனியே பிரிந்து பூமியை நோக்கி வந்தது. சற்றுப் பிசகு ஏற்பட்டிருந்தாலும் பேழை எரிந்துபோயிருக்கலாம், அல்லது கலம் அந்தரத்திலேயே நிரந்தரமாக சுற்றிக்கொண்டிருக்க நேர்ந்திருக்கும். ஆனல் யாவும் வெற்றிகரமாகி செயற்பட்டு பேழை காற்று மண்டலத்துக்குள் பாய்ந்துவந்தது. அதன்பேழையிருந்த 'பாரசூட்'கள் விரிந்து வேகத்தைக் குறைத்தன ''நாம் பத்திரமாக இருக்கிறேம். கவலை வேண்டாம்'' என்று விண்பயணிகள் அறிவித்தனர். அதன்பின் விண்கலப் பேழை பசுபிக் சமுத்திரத்தில் மிக லாவகமாக வந்திறங்கியது.



யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரி 10-வது ஆண்டு நிறைவு விழாவில் தொழில்நுட்ப கல்விப்பகுதி உதவி டைரக்டர் ஜெனரல் திரு சில்வா பேசிக்கொண்டிருக்கிறார். திருமதி சில்வாவும், முன்னாள் யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி அதி[illegible] திரு. நாகலிங்கம் ஆகியோரும் படத்தில் [illegible]ணப்படுகிறார்கள். படம்: ஏ. வி. எம்.

## சந்திரனில் நடப்பர்

ஜுலைமாதம் அமெரிக்கா சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு திட்டமிட்டிருப்பதுபற்றி வானவெளி வீரர் ஒருவர் பின்வரும் தகவல்களைக்கூறினர்.

அமெரிக்க வானவெளிப் பயண திட்டப் பிரிவை சேர்ந்த ஜாக்சுமிட் என்ற வான வெளி வீரர் ஹுவுஸ்டனில் நிருபர்களிடம் கூறியதாவது:-

சந்திரனில் அமைதி கடல் பகுதிக்கு தென் மேற்கே ஜுலை மாதம் 21-ந் தேதி அமெரிக்கா வீரர்கள் இறங்குவார்கள். ஆம்ஸ்டிராங், ஆல்டிரின் ஆகிய வீரர்கள் 'அப்போலோ-11' ராக்கெட்டில் சென்று சந்திரனை சுற்றுவார்கள். அங்கிருந்து சந்திரக்கப்பலில் ஜுலை 20-ந் தேதி சந்திரனில் போய் இறங்குவார்கள். இறங்கியதும் சந்திரக் கப்பலை அவசரமாக கிளப்பிக்கொண்டு பறந்து வருவதற்கு தயார் நிலையில் வைத்து இருப்பார்கள். எல்லா கருவிகளும் சரியாக உள்ளனவா என்பதை சோதித்துப் பார்ப்பார்கள்

பின்னர் நன்ருக ஓய்வு எடுத்து விட்டு ஜுலை 21ந் தேதி காலை முதல் வீரராக ஆம்ஸ்டிராங் சந்திரனில் காலடி வைப்பார். அவர் இறங்கிய பிறகு 27 நிமிடம் கழித்து ஆல்டிரின் சந்திரனில் காலடி வைப்பார்.

## 300 அடி தூரம் நடப்பார்கள்!

வானவெளிப்பயண திட்டத்தை சேர்ந்த இன்னொரு அதிகாரியான ரேசெடேகர் நிருபர்களிடம் கூறியதாவது:-

சந்திரனில் இறங்கியபிறகு சந்திரகப்பலில இருந்து ஆம்ஸ்டிராங்கும், ஆல்டிரினும் 300 அடி தூரம்வரை நடக்கலாம். 100 அடி தூரம் நடந்தால்போதும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் 300 அடி தூரம்வரை அவர்கள் நடக்கமுடியும்.

சந்திரனின் நிலப்பரப்பில் 2 மணி 30 நிமிட நேரம் உலாவி பல சோதனைகளை நடத்திய பிறகு ஆம்ஸ்டிராங்கும், ஆல்டிரினும் சந்திரக் கப்பலுக்குள்வந்து ஏறுவார்கள். அங்கிருந்து ராக்கெட்டை இயக்கி புறப்படுவார்கள். சந்திரனைச் சுற்றி பறந்துகொண்டிருக்கும் அப்போலோ—11 தாய்க் கப்பலுடன் இணைவார்கள்.

# நேரு மறைவு
## சாந்தி பவனில் பிரார்த்தனை

புதுடில்லி, மே 27

நேருஜி மறைந்த ஐந்தாவது ஆண்டு நிறைவுதினம் இன்று பாரதம் எங்கும் அனுட்டிக்கப்பட்டது.

இன்று அதிகாலையில் சாந்தி பவனில் இடம்பெற்ற புனிதக் கைங்கரியங்களில் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி, திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஆகியவர்களும் மத்திய மந்திரிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இந்து புரோகிதர்கள் வேதம்ஓதினார்கள். உபநிஷதத்திலிருந்தும் வேத நூல்களிலிருந்தும் புனித வாக்கியங்கள் வாசிக்கப்பட்டன. காஷ்மீரிலிருந்து வந்திருந்த சிலர் தெய்வீகப் பாடல்களைப்பாடினார்கள். பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் பிரார்த்தனைகள் நடத்தினார்கள்.

மாலையில் தீன்மூர்த்தி இல்லத்தில் இடம்பெற்ற வைபவத்தில் நேரு நூல்நிலையக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை பிரதம மந்திரி திருமதி காந்தி நாட்டினார்.

## 'தெய்வமாக வழிபட வேண்டும்'

அளவெட்டி, செவ்.

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எமது இனத்தில் வாழ்ந்து உலகப் புகழ்பெற்ற திருக்குறளை இயற்றிய வள்ளுவரை ஒவ்வொரு தமிழ் மகனும் தெய்வமாக வழிபட வேண்டும்'' என்று யாழ் தமிழ்ச் சங்க ஆதரவில் நிகழ்ந்த வள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய கவிஞர் விஜயேந்திரன் கூறினர்.

மல்லாகம் விவேகானந்தா கல்வி நிலையத்தில் இவ்விழா நடைபெற்றது.

## லக்னோவில் குழப்பம்

புதுடில்லி, மே 21

லக்னோவில் ஒரே வகுப்பைச் சேர்ந்த இரு கோஷ்டிகள் மோதிக்கொண்டதில் 2 பேர் பலியானார்கள். ஒருவர் தம்வீட்டுக்குள் வைத்து கத்தியால் குத்தப்பட்டார். அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

ஊர்வலம் ஒன்றின்மீது கல்லெறியப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தகராறுகள் ஏற்பட்டதாம். தெருக்களில் கடைகள் மீது கற்கள் வீசப்பட்டன. லக்னோவில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பொன் மகளிர் மகா வித்தியாலயம், வேலணை மத்திய மகா வித்தியாலயம் என்பனவற்றில் 'ஆங்கில-வாரம்' கொண்டாடப் பட்டது.

சூடானில் திரு. அபூபக்கர் அவாதல்லா தலைமையிலான மந்திரிசபை இன்று பதவி ஏற்றுக்கொண்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற புரட்சியின்பின், முக்கிய இடங்களிலும் ஜனாதிபதி மாளிகை முன்னும் ஆயுதம் தாங்கிய படையினர் காவல் புரிகின்றனர். ஆனல் நிலைமைக் கட்டுக்குள் இருப்பதாகவும் எங்கும் அமைதி நிலவுவதாகவும் ஆட்சியாளர் அறிவித்தனர். புதிய மந்திரிசபையில் கம்யூனிட்கட்சி அங்கத்தவர் ஒருவரும் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. புரட்சி சபையின் தலைவராக மேஜர் ஜெனரல் ஜஃபார்முனேரி பதவி ஏற்றிருக்கிறார்.

## 450 பேர் கைது

ஹைதராபாத், மே 27

தெலுங்கான கிளர்ச்சிக்காரர்கள் சுமார் 450 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டார்கள். கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## ரூ. 5 கோடி

ஆந்திர பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சூருவளிக் கொடுமைகளால் பாதிக்கப்பட்டபகுதிகளில் நிவாரண வேலைகளுக்கென ஆந்திர அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது.

சேதன். இதனுல் எத்தனையோ நோயாளிகளின் உயிர் காப்பாற்றப்பட்டது.

அரசாங்கம் கசரோகம் உள்ளவர்களுக்கும் அவர் குடும்பத்திற்கும் நிவாரணப் பணம் வழங்கியது. ஆனல் நோய் மாறியபின் நிவாரணப் பணம் வழங்கப்படவில்லை. எமது சங்கம் நோய்மாறியவரின் குடும்ப நிலையை அறிந்து அவற்றுக்குத்தக்கதாக நிவாரணம் வழங்கிவருகிறது.

இறுதியில் தலைவராக பி. எல. பற்றிக்ஸ், காரியதரிசியாக த. சிவலிங்கம், தன

செய்து வருகின்றனர்.

## 'பஸ் நிலையம் அமைக்குக'

ஊர்காவற்றுறை, செவ்.

ஊர்காவற்றுறையில் பஸ் நிலையம் ஒன்றை அமைத்து தீவுப்பகுதி பஸ் சேவையை சீர்திருத்தி நடத்துமாறு தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கம் சம்பந்தப்பட்ட அமைச்சைக் கேட்டுள்ளது.


ரவி என்ருல் ...
... "சரி"



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.
உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்
சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்
தீந்தையை வீணடித்தல்
இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி தீந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை தீந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.
அதுவே தரத்தின் உத்தரவாதம்.


சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காண்பிக்க உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்.
ரவி இன்டஸ்றீஸ் லிமிடெட்

RI-2-69-MASTERS




பருத்தித்துறையில் நடந்த கடற்சிப்பிகள் பொருட்காட்சியில் ஒருபகுதி. படம்: ஏ.வி.எம்.



யாழ்ப்பாணத்தில் நடந்த சேக்கிழார் விழாவில் சேக்கிழார் திருவுருவப்படமும், ஏட்டுச்சுவடிகளும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது எடுத்த படம். படம்: ஏ. வி. எம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அநாவசியமாகச் செலவழிப்பதும் அஹிம்சை நெறியை மீறுவதற்கு ஒப்பாகும்.

—மகாத்மா காந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 15-ந் திகதி (28-5-69)


## சிங்களமும் பௌத்தமும்

வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அடுத்தமாதம் முதல் திகதி அரசாங்கம் எடுத்துக்கொள்ளவிருக்கிறது. இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு தமிழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழரசுக் கட்சியோ, தமிழ்க் காங்கிரஸ் கட்சியோ எதிர்க்கவில்லை. தென்னிலங்கையிலுள்ள பெரும் அரசியல் கட்சிகளுடன் உறவும் தொடர்பும் கொண்டுள்ள கட்சிகளும் அதன் கிளைகளும் எதிர்க்கவில்லை. இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கத்தான் வேண்டுமென்பது பலரின் அபிப்பிராயம். பாடசாலைகளை எடுக்கும் போது அப்பாடசாலைகள் தோற்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களும் அவற்றை நடத்துவதற்குக் காரணமாக இருந்தவர்களுமான ஆசிரியர்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது மற்றும் பலரின் கோரிக்கை. இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதற்கு ஆட்சேபமில்லை ஆனால் இதுவரை இந்தப் பாடசாலைகளில் படித்து வந்த பிள்ளைகள் தங்கள் தாய் மொழிமூலம் கல்வி கற்று வந்தது போலவே தொடர்ந்தும் தாய் மொழி மூலம் அதாவது தமிழ் மொழி மூலம் கல்வி கற்று வரவேண்டுமென்றும் அங்கு சிங்களத்தைப் போதனா மொழியாக்கக் கூடாதென்றும் தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் கோருகின்றன. இப்பொழுதுள்ள நிலையிலேயே அதாவது தமிழே போதனா மொழியாக இருக்கும் நிலையிலேயே இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவிருக்கிறது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஆனாலும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு எந்த மொழியின் மூலம் கல்வி கற்பிக்க

கூறியவர். அவரது நோக்கம் நாடறிந்த விஷயம். இந்நிலையில் கல்வி அதிகாரிகள் போதனாமொழி விஷயத்தில் தங்கள் செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லையென்று சிங்களத்தைப்போதனா மொழியாக்க வேண்டுமென, வேறு பல காரணங்களுக்காகவிரும்பும் சிலர் கல்வி அமைச்சருக்குத் தந்திச் செய்தி அனுப்புவது 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற கதைதான்.

மூன்று பௌத்தபாடசாலைகள் ஒரு விவகாரமாக உருவெடுக்காமலும் போதனாமொழிஒருபிரச்னையாகதோன்றாமலும இருந்திருக்கவேண்டுமானால் இரண்டே இரண்டு காரணங்களை தமிழ் மக்கள் குறிப்பாக வடபகுதித் தமிழ் மக்கள் ஏற்படுத்தாமலிருந்திருக்கவேண்டும் இப்பொழுதும் கூட இந்த இரண்டு அம்சங்களிலும் அவர்கள் கவனம் செலுத்தி அதற்குப் பரிகாரம் காணமுடியும்.

ஒன்று, வடபகுதியில் சாதிப்பாகுபாட்டுக்கு முற்றுப் புள்ளிவைப்பது.

இரண்டாவது, வசதியுள்ளவர்கள் தனிப்பட்டவகுப்புக்களிலும் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களை அமர்த்தியும் சிங்களம் படிப்பதற்குரிய வாய்ப்பு, வசதிகுறைந்த சகல பிள்ளைகளுக்கும் கிடைக்கக்கூடியதாக, அரசாங்க உத்தியோகத்தை விரும்புபவர்களும் விரும்பாதவர்களும் சிங்களம் கற்றுக் கொள்ளக் கூடியதாக சகல பாடசாலைகளிலும் சிங்களத்தையும் ஒரு பாடமாகக் கற்பதற்குவசதிசெய்வதுதான்.

வசதியுள்ளவர்கள் சிங்களத்தைபடித்து முன்னேறமுடியுமானால்வசதியில்லாதவர்கள்சிங்களம்படிப்பதற்கு அதனைப் போதனாமொழியாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற சிலரின் மனோநிலையை மாற்றுவதற்கு சிங்களத்தை இஷ்டபாடமாகவாவது சகல பாடசாலைகளிலும் போதிக்க

## இன்று வண்ணை விசுவேசப் பிள்ளையார் ஆலய புதிய தேர் வெள்ளோட்டம்

# தமிழர் வாழ்வும் தேரின் சிறப்பும்


— அ. மு. பரமசிவானந்தம் —

(தமிழ்துறை பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரி, சென்னை)


யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் ஆலயத்தில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறுகிறது. அறுபதினாயிரம் ரூபாய் செலவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கலாகேசரி ஆ. தம்பித்துரையும் அவர் சகோதரர் ஜீவரத்தினமும் இத்தேரை உருவாக்கிய சிற்பிகளாவர். புதிய தேரின் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

தமிழர் வாழ்வில் 'தேர்' இன்றியமையாத-நிலைத்த-பண்பட்ட ஒரு நல்லிடத்தைப் பெற்றிருக்கின்றது. அவர்கள் எதையும் தேர்ந்தெண்ணிச்செய்யும் செம்மையுளத்தராய்ப் பழங்காலந்தொட்டே வாழ்ந்துவருகிறார்கள். எனவே வாழ்வின் செம்மை அவர்கள் தேர்ந்தெடுக்கும் தெய்வ நெறியிலும் அமைந்துநின்றது.

தேர் என்றதும் தற்போது நமக்கு இறைவன் 'ஆரோகணித்து'ப் பவனிவரும் திருத்தேர்தான் நினைவுக்கு வரும். ஆயிரக்கணக்கான மக்கள் இறைவன் திருப்பெயரைச் சொல்லி வடம் ஈர்க்க அசைந்தாடிக் கொண்டு வீதியில் உலா வரும் திருத்தேர்க் காட்சி, கண்கொள்ளாத் திருவிழாக் காட்சியாக அமைவதை யாவரும் அறிவர். அத்தகைய 'திருத்தேர்'ப் பணி யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலுள்ள ஐயனார் கோவிலடி விசுவேசவிநாயகருக்கு அமைக்கப்பெற்று அதன் வெள்ளோட்ட விழாவும் நிகழப்போவதறிந்து மகிழ்கின்றேன்.

'ஐ' என்ற சொல்லுக்குத் தலைமை என்பது பொருள். வியப்பு, அழகு, நுண்மை என்ற பல பொருள்களும் உள்ளன. எனவே ஐயனார் கோவிலடியில் எழுந்தருளிய விநாயகருக்கு அமைக்கப் பெறும் திருத்தேரும் அத்தனைப் பொருள்களும் செம்மையுறத் திகழும் என்பது உறுதி.

தேர் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளமை அறிவோம். ஆராய்தல், அறிதல், சிந்தித்தல், தெரிந்தெடுத்தல், தெளிதல், தேடுதல், நிச்சயித்தல்,

'எனினும் புல்லி ஆற்றுப் புரையொக்க காண வன்பு தெரிந்து ஊர் மதி, வலவ - நின் புன் இலற் கலிமா பூண்ட தேரே' ஐங் 486)

என்று ஐங்குறுநூறு அழகுறக் காட்டுகிறது. எனவே 'தேர்' தமிழர் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நிலைத்த இடம்பெற்று, அவர்தம் செம்மை நிலையினைத் தெளிவுறக் காட்டுகின்றது.

அக்காலத்தில் தேர்களைக் குதிரைகள் ஈர்த்துச் செல்லும். (இன்று கார்களை ஈர்த்துச் செல்லும் சக்தியை அக்குதிரை ஓட்டத்தாலேயே கணக்கிடுகின்றனர்.) இன்று அதுபோன்ற தேர்களை நம்மால் காண முடியவில்லை. எனினும் இறைவன் அமர்ந்து பவனி வரும் தேர்களை ஊர் தோறும் காண முடிகின்றதன்றோ! சமயம் போற்றிய தெய்வத்தமிழ் மக்கள் தாம் தேர்ந்தெடுத்த- சிறந்தவை எனக் கண்ட பொருள்களை இறைவனுக்கு அளித்தல் மரபு; எனவே தமக்கு வாகனமாகத் தேர்ந்தெடுத்த திருத்தேரை இறைவனுக்கு உரிமையாக்கி விட்டார்கள். அப்படியேகருங்கற்சோயிலை ஆண்டவனுக்கு உரிமையாக்கி அவனைக் 'கல்வீட்டான்' எனவே அழைத்தனர். இவ்வாறு அழைக்கும் வழக்கு இன்றும் தமிழ்நாட்டுக் கிராமங்களில் உள்ளது. அக் காலத்தில் [illegible]ரைகளாகிய 'மா' தேர்களை ஈர்க்க, இறைவன் திருத்தேரை மக்களாகிய பசுக்களே ஈர்க்கத் தொடங்கினர். [illegible] ரும் [illegible]ர்ந்த நெடுந்தேர் இறைவனுக்கு உரிமையாக்

எனவே மக்கள் யாதொரு வேறுபாடும் இன்றி எல்லோரும் ஓரினத்தவராய் ஒரே இறைவனின் ஒன்றிய மக்களாய் நின்று அவ்விறைவனை தேரில் இருத்தி தம்பாசம் நிலைக்கப்பற்றி ஈர்க்கும் பெருவிழாவே தேரோட்டத் திருவிழா இந்தப் பெருவிழாவின் சிறப்பை யாழ்ப்பாண மக்கள் ஐயனார் கோவிலடி விநாயகப் பெருமானின் விழாவின் பெறப்போகிறார்கள்என்றால் அவர்தம் பேறேபேறு அன்றோ.

மனமாகிய தடத்திலே இறைவனை இருக்கவைத்து அவனைப்பற்றி நம்வழி ஈர்த்துப் போற்றி வழிபடுவதே முத்திக்கு வித்தாவது அத்தகைய பெருவாழ்வை தனித்துப்பெற நல்லவர் விரும்பமாட்டார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டு யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற உணர்விலேயே எல்லா உயிர்களையும் ஈர்ப்பர்.

தாயுமான அடிகளார்,

காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகாரசிவ போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நான் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்கே சேரலாகும் சகத்தீரே!

எனனிப்பதை அறிவோம். இந்த அடிப்படையிலேயே 'தாம் இன்புறுவது உலகின்புறக்காணும். தகுதி வாய்ந்த நல்லவர்கள் எல்லா உயிர்களையும் தம்முடன் பிணைத்துப் பேரின்பவாழ்வுக்கு அழைத்துச் செல்லமுயல்வர் அந்த முயற்சியை உணர்த்துவதே தேரோட்டத் திருவிழா மனத்தட்டில் மாபெரும்தலைவனும் விநாயகரை இருத்தி, தம்மை ஒறுத்து அவனை எண்ணும் அன்புக் கயிற்றைப் பற்றி, அனைவரும் ஒன்று சேர்ந்து ஈர்த்தால்பெறுதற்கரிய பெருவாழ்வைப் பெற இயலும். இந்த நல்லஅடிப்படையில் அமைத்த தேரோட்டம் புறக்கண்! அகக்கண் இரண்டுக்கும் அழகாகவும் ஆக்கமாகவும் அமைகின்றது. உயிருக்கும் உயரும் ஆக்கமாக அமைகின்றது. இத்தகைய ஆக்கவிழாவினை-அரும்பணியினை - மேற்கொண்டு வெள்ளோட்ட விழாக்காணும் யாழ்ப்பாணம் ஐயனார்கோவிலடி விசுவேசப்பிள்ளையார் கோவில் ஆட்சியாளர்கள் பணி சிறப்பதாக என வாழ்த்துகிறேன். வாழ்க அவர் தொண்டு! வளர்க இறைபணி! சிறக்கவெள்ளோட்டம்! செழிக்க தேரோட்டம்.

## "முழுக்க சிங்களமயமானால் பகிஷ்கரிப்போம்"

மட்டுவில், செவ்வாய்

"சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு வசதி உள்ளவர்கள் ஆங்கிலம் படித்து முன்னேறி உத்தியோகம் பார்த்து இன்று உயர் நிலையை அடைந்துகொண்டிருக்கும் அதே கட்டத்தில் பரம்பரைபரம்பரையாக தமிழைப் படித்து த[illegible] கலை கலாசாரங்க[illegible] வளர்ந்து கைத்தொழில், கமத்தொழில்கள் செய்து வந்த தமிழ் பரம்பரையினரான சிறுபான்மைத் தமிழரை தமிழை அழிக்க முயல்கிறார்கள் என்று [illegible] பெரும்பான்மைத்தமிழர்

"அமெரிக்கப் பாதிரிமார் இலங்கைக்கு வந்ததும், நீ முந்தி நான் முந்தி என்று முந்தியடித்துக்கொண்டு, ஓடிப்போய், தமது மொழி கலை கலாச்சாரத்தை விற்று பெரும்பான்மை தமிழ் மக்கள் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்த்ததை நாடறியும். இந்த நிலையில் சிறுபான்மைத் தமிழினத்தின் மனிதாபிமான உரிமைகளைக் கொடுக்காது, அவர்களை சகோதரத்துவத்துடன் நடத்தாது ஒதுக்கி வைத்தனர் பெரும்பான்மைத் தமிழர். இதே கட்டத்தில் தமிழ்மொழியை மட்டும்

## 'இசைமன்னன்' சித்தூரார்

காஞ்சிபுரம்னை நயினாப்பிள்ளை என்றால் கர்நாடக சங்கீத உலகம் இன்றும் நடுங்கும். லயவிந்நியாசங்களில் அவரைப் போன்ற வித்வான் எப்பொழுதும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை. கர்நாடக சங்கீதத்துக்கு பிரதானமானது லயம் என்று சொல்லப்படும் தாளம். வேறு எந்த சங்கீதத்திலும் இதில் இருப்பது போன்ற தாளக்கட்டுப் பாடுகள் இல்லவே இல்லை.

நயினாப்பிள்ளையின் பரம்பரையில் அவருடைய பிரதம சீடராக விளங்குபவர் இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் 'இசை மன்னன்' சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை. சித்தூரார் 1937-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு ஒருசமயம் வந்திருந்தார். அதற்குப்பின் அவர் இங்கு வருவது இப்பொழுதுதான்.

சித்தூரார் கச்சேரிமேடையில் அமர்ந்தாலே ஒரு மன்னன் போலவே காட்சியளிப்பார். காஞ்சிபுரம் பட்டு வேஷ்டியும் அங்கவஸ்திரமும் அணிந்து அவர் கம்பீரமாக இருக்கும்பொழுதே சபையோருக்கு ஆனந்தமாயிருக்கும். நெற்றியில் துலங்கும் ஜவ்வாது பொட்டிலிருந்து கமகமவென்று வாசனை சபை முழுவதிலும் பரவிவிடும்.

கச்சேரி ஆரம்பித்துவிட்டால் அப்புறம் சொல்லத் தேவையில்லை. வர்ணம், கீர்த்தனம், கிருதி, பல்லவி, தில்லானா, ஜாவளி எல்லாம் ஒழுங்குமுறையில் அடுக்காக வரும். அவர் ஐந்து ஆறு மணி நேரம் தொடர்ச்சியாகப் பாடுவதைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

ஆந்திரவாசியான சித்தூரர் சென்னை பட்டினத்திலே பல வருடங்கள் வாழ்ந்து தியாகையர் போல தமிழையும் நன்றாகப் பயின்று கொண்டார். அவருடைய இசைப் புலமையை உணர்ந்தஅண்ணாமலைப் பல்கலைக் கழகம் அவரை இசைப் பேராசிரியராக நியமித்தது. அவரிடம் அண்ணாமலையில் பயின்ற பல இசை மாணவர்கள் இன்றும் இலங்கையில் இருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர தனிப்பட்ட முறையில் அவரிடம் பாடம் கேட்டு அவருக்கு ஜீவியபரிபந்தம் கடமைப்பட்டுள்ள சில இலங்கையரும் இருக்கிறார்கள். தற்சமயம் ஜனசஞ்சகமாகப் பாடி தென்னிந்தியாவின் தலைசிறந்த வித்வான்களில் ஒருவராக விளங்கும்மதுரை சோமசுந்தரம் சித்தூராரின் சீடன் என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

சித்தூரார் பாணி ஒரு தனிப்பாணி. அவர் ராகம் பாடுவதே ஒரு அலாதியான முறை. எங்கிருந்து ஆரம்பிக்கிறார் எங்கே முடிக்கப் போகிறார் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவர் பாடி முடித்தபின் அந்த ராகத்துக்கு நாங்கள் முன் தெரிந்திராத ஒரு புதிய உருவம் கொடுக்கப் பட்டிருக்கும்.

தியாகையரின் சிலஅபூர்வமான, அதாவது சாதாரண வழக்கில் இல்லாத கீர்த்தனங்களை சித்தூராரிடம் தான் கேட்க வேண்டும். எனினும் அவருடைய பெருமை பல்லவி பாடுவதில் தான் உள்ளது. தென்னிந்தியாவிலுள்ள சில புகழ் பெற்ற மிருதங்க வித்வான்கள் அவரோடு கச்சேரி செய்ய ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் மனிதர் இடக்குமுடக்காக ஏதாவதொரு பல்லவியைப் பாடி மிருதங்கக்காரரை திக்குமுக்காடச் செய்துவிடுவார்.

இராமநாதன் அகடமியின் இறுதி 'சங்கீத ரத்தினம்' பரீட்சைக்கு பரிசோதகராக வந்திருக்கும் சித்தூராரை இம்முறையாவது ஒரு நல்ல கச்சேரி செய்யும்படி ஒழுங்கு செய்பவர்களுக்கு இங்குள்ள சங்கீதப்பிரியர்கள் மிகவும் நன்றி கூறுவார்கள் என்பது நிச்சயம்.

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

## டாக்டர் கணபதிப்பிள்ளை

காரைநகரைச் சேர்ந்த டாக்டர் ஏ. கணபதிப்பிள்ளை மறைவு பேரிழப்பாகும். 1894ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 14ம்தேதி பிறந்த இவர் தனது ஆரம்பகல்வி

## 13-வது வள்ளுவர் நினைவு விழா

உடுப்பிட்டி, செவ்.

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 13-வது திருவள்ளுவர் நினைவுவிழாவும் திருவள்ளுவரின் 2000 ஆண்டுநிறைவு விழாவும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யிலேயே இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவிருக்கிறது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஆனாலும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு எந்த மொழியின் மூலம் கல்வி கற்பிக்க விரும்புகிறார்களோ அந்த மொழியில் கல்விப் போதனை அளிக்க இப்போதுள்ள கல்விச் சட்டம் வகை செய்கிறது என்பதை கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியிருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்த மூன்று பாடசாலைகளையும் பொறுப்பேற்க வந்த கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் சிங்களமே தங்கள் பிள்ளைகளின் போதன மொழியாக வேண்டுமென்று கோரி பெற்றோர்கள் சிலரும் சில பிள்ளைகளின் பாதுகாவலரும் கையொப்பமிட்டு பத்திரங்கள் நிரப்பிக் கொடுத்துள்ளதாகவும் இப் படிப் பத்திரங்கள் நிரப்பிக் கொடுப்பதற்கு இங்கு வந்த கல்வி அமைச்சின் அதிகாரிகள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி நிர்ப்பந்தப்படுத்தியிருப்பதாகவும் சிலர் புகார் தெரிவித்துள்ளனர். பெற்றோர் தமது விருப்பப்படியே போதன மொழி சிங்களமாக இருக்க வேண்டுமென விரும்பிப் பத்திரங்களை நிரப்பிக் கொடுத்துள்ளதாகவும் இதில் கல்வி அமைச்சு அதிகாரிகள் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லையென்றும் தமிழர் பௌத்த காங்கிரஸ் தலைவர் கல்வி அமைச்சருக்குத் தந்திமூலம் அந்தப் புகாருக்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

மொத்தத்தில் வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் எடுப்பதற்கு எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லையென்ற நிலைமாறி இப்போது போதன மொழியில் கூட சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது.

தாய் மொழி மூலமே கல்வி போதனை அளிக்கப்பட வேண்டுமென்பது சர்வ தேசத்திலும் ஒப்புக் கொண்ட பொதுவிதி. இங்கு கல்வித் திட்டத்தை சீர்திருத்தி அமைக்கப் புறப்பட்ட கல்வி அமைச்சர் வெளிநாடு சென்று திரும்பியதும் முதலில் சகல பிள்ளைகளுக்கும் சிங்களமே போதன மொழியாக இருக்க வேண்டுமென்று தெரிவித்து பின்னர் பெற்றோர்களின் இஷ்டப்படியே பிள்ளைகளின் போதன மொழி இருக்க வேண்டுமென்று தமது கல்வி வெள்ளையறிக்கையில்

...லைப் போதனமொழியாக ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற சிலரின் மனோநிலையை மாற்றுவதற்கு சிங்களத்தை இஷ்ட பாடமாகவாவது சகல பாடசாலைகளிலும் போதிக்க அனுமதிப்பதுதான். அரசாங்க உத்தியோகத்தை விரும்புபவர்கள் சிங்களம் படித்துத்தான் ஆக வேண்டுமென்றும் புதிய அரசாங்க ஊழியர் சிங்களம் படிப்பதில் ஆட்சேபமில்லையென்றும் இன்று தமிழ்த் தலைவர்கள் கூறுகின்றனர். உத்தியோகத்துக்கு மட்டுமல்ல அரசாங்கத்துடனும் தனியார் துறையினருடனும் எவ்வித தொடர்பு கொள்வதற்கும் சிங்களம் அவசியம் என்ற நிலைஏற்பட்டு விட்டது. இந்தநிலையிலாவது நாங்கள் சிங்களம் படிக்கத்தயார் என்று கூறி முன்மாதிரி காட்டினால் பௌத்த மதத்தைப் பரப்பவேண்டுமென்று விரும்புகிறவர்களாவது தமிழ் மூலம் பௌத்தத்தைப் பரப்புவதற்காக தமிழிலுள்ள சிறந்த பௌத்த இலக்கியங்களான மணிமேகலை, குண்டலகேசி ஆகியவற்றை அறிந்து கொள்ள தமிழ் மொழியைப் படிக்கமுன்வர மாட்டார்களா?

## ஆண்டு விழா

மட்டுவில், செவ்.

சமஸ்கிருத கலாசாலையினதும், குருகுலத்தினதும் ஆண்டு விழா கூட்டம் ஜூன் மாதம் 1-ம் திகதி நல்லூரில் நடைபெறும்.

நல்லூர் சடையம்மாள் மடத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு சிவஸ்ரீ து. சண்முகானந்தக் குருக்கள் தலைமை தாங்குவார். இதில் பண்டிதர் க. வீரகத்தி விசேட சொற்பொழிவாற்றுவார். மேற்படி சபையின் நிர்வாக சபைக் கூட்டமும் அன்று நண்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

## யாருடையது

யாழ்ப்பாணம், புதன்

திறப்புக் கோர்வை யென்று வைத்தீஸ்வரா வித்தியாசாலையின் முன் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த எஸ். சண்முகராசாவால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மேமாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உறுதி.

தேர் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளமை அறிவோம். ஆராய்தல், அறிதல், சிந்தித்தல், தெரிந்தெடுத்தல், தெளிதல், தேடுதல், நிச்சயித்தல், கொள்ளுதல் எனப் பல பொருள்கள் உள்ளன. தமிழர் தம் வாழ்வில்கண்ட எத்தனையோ வாகனங்களில்இத் தேரையே சிறந்த வாகனமாகத் தேர்ந்தெடுத்த காரணத்தினால்தான் இதற்குத் 'தேர்' எனப் பெயர் வந்ததோ என எண்ணவேண்டியுள்ளது. திருவள்ளுவர் இத் தேரை உவமை வாயிலாக எடுத்தாளுகின்றார்.

பழங்காலத்தில் தமிழ் நாட்டின் தெருவெல்லாம் தேரோடும் தெருக்களாக இருந்தமையை இலக்கியங்கள்எடுத்துக்காட்டுகின்றன. 'புதல்வனைத் தேர் வழங்கு தெருவிற் றமியோன் கண்டே' (அகம் 16) என அகநானூறு பாராட்டுகின்றது. இக்காலத்தில் காரோடும் தெருக்கள் என்று நாம் கூறுவதைப்போன்று அன்று அவை தேரோடும் தெருக்களாக இருந்தன என அறிய முடிகின்றது. அரசர், புலவர்க்கு வரிசை அறிந்து நல்கும் பரிசுப் பொருளாகவும் தேர் அமைந்திருந்தது. சிறந்த புலவர்களைப் போற்றிப் பாதுகாத்து, புரவலர் வழியனுப்பும்போது தேரேற்றி, அத்தேரையே பரிசாக அளித்து அனுப்பும் மரபினைப் பல இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. பாரியின் கொடைச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக-முல்லையின் பற்றுக்கோடாக- அமைந்ததும் சிறந்த தேர் அன்றோ! இவ்வாறு மக்கள் வாழ்வில் அக்காலத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது தேராகும்.

போர்ப்படையில் தேர்ப்படை முக்கிய அங்கமாக இருந்ததையும் உணர்கின்றோம். நால்வகைப் படைகளுள் தேர்ப்படையே முதலிடம்வகிக்கின்றது. 'நெடுந்தேர் நுடங்கு கொடி அவர் வாப்பொலிந்து' (பதிற் 83-4) என்று பதிற்றுப்பத்து அத்தேர்ப்படையைச் சித்தரிகின்றது: எனவே மக்கள் போர்க்களத்தே இத்தேர் இன்றியமையா இடத்தைப்பெற்று அவர்தம் வெற்றிக்கு நிலைக்களனாக விளங்கியதென உணரமுடிகின்றதன்றோ! 'கடுந்தேர் ஏறியும் காலின் சென்றும்' (நற் 349-1) என நற்றிணை மக்கள் சாதாரணமாக நடப்பதுபோன்று தேரிலும் ஏறிச் செல்வார்கள் என்ற உண்மையை உறுதிசெய்கின்றது. தலைவர் தேரேறிச் செல்லும் சிறப்பினை,

இல் ... ரைகளாகிய 'மா' தேர்களை ஈர்க்க, இறைவன் திருத்தேரை மக்களாகிய பசுக்களே ஈர்க்கத் தொடங்கினர். மன்னரும் செல்வரும், ...ரும், வெற்றியாளரும் ...ர்ந்த நெடுந்தேர் இறைவனுக்கு உரிமையாக்கப் பெற்றது.

இறைவன் திருவிழாவில் தேரோட்டம் இன்றியமையா-உயர்ந்த இடத்தை பெறுவதாகும். இத் திருத்தேருக்கு தத்துவப்பொருள் காட்டுவர் அறிஞர். நான்கு சக்கரங்களையும் தேர்த்தட்டினையும் மேலே அமைந்த விதான அடுக்குகளையும் அவற்றின் உச்சியிலுள்ள கலசத்தையும் அதற்குமேல் விண் முட்டப் பறக்கும் கொடியினையும் தனித்தனியாக கட்டி உணர்த்தி அவை ஒவ்வொன்றும் உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படையிலும் உபாய நெறியின் அமைப்பினும் உள்ள வகையினை விளக்குவர் சமய நெறியாளர் உலக வாழ்க்கைக்கு தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற இந்தத் தேரும் தேரோட்டமும், உலக வாழ்வையிட்டு இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டியாக அவ்வாழ்வுக்கு உயிர்களைக் கொண்டு செல்லும் ஊர்தியாக அமையும் நெறி அறிந்தறிந்து போற்றத்தக்க ஒன்றாகும். இறைவனாகிய - ஐயனார் ஐயனாகிய இறைவனார் - திரிபுராதிகளை எரிப்பதற்காக காமம் வெகுளி, மயக்கம் என்ற உயிர்களைப் பற்றிக் கெடுக்கும் மூன்று கொடும் புரங்களை எரிப்பதற்காக புறப்பட்ட தேரினைப் பற்றியும் அதன் அமைப்புக்கள் பற்றியும்புராணங்கள் உலக பாசத்தில் படகு காமம் வெகுளி மயக்கத்தில் அழிந்து மாயமே உய்யும் பொருட்டு ஆண்டவன் இத் தேர் உலா வாகனமேற் கொள்கின்றான். இந்த விழாவில் எந்தவேறுபாடும்கிடையாதே.

தேரினைப்பற்றி ஈர்க்கும் உயிர்கள்பாவநீக்கம்பெறும் என்பது பண்டை தொட்டு வாழ்ந்துவரும் அசைக்கமுடியாத நம்பிக்கை. தேர்வடத்தைச் சிறுநேரமாயினும் பிடித்து ஈர்க்க ஒவ்வொருவரும் முயல்வதைத்தே ராட்ட விழாக்களில் காணலாம். அதனாலே இறைவன் திருத்தேரை மாடுகள் கொண்டோ குதிரைகள் கொண்டோ ஈர்க்கும் வழக்கம் இல்லை, (தற்போது சில விடங்கள் அந்தவழக்கத்தை மேற்கொள்ள முயல்கின்றனர். மின்சார விசையாலும் ஈர்க்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.)

கலை கலாசாரங்க... வளர்ந்து கைத்தொழில், கமத்தொழில்கள் செய்து வந்த தமிழ் பரம்பரையினரான சிறுபான்மைத் தமிழரை தமிழை அழிக்க முயல்கிறார்கள் என்று ... பெரும்பான்மைத்தமிழர் திட்டுகிறார்களே; இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?"

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணியின் கீழ் இயங்கும் தென்மராட்சி மக்கள் மறுமலர்ச்சி மன்ற பிரமுகரான டாக்டர் பி. எட்வேட் தனது அறிக்கையில் கேட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பான்மைத் தமிழினத்தின் மனிதாபிமான உரிமைகளைக் கொடுக்காது, அவர்களை சகோதரத்துவத்துடன் நடத்தாது ஒதுக்கி வைத்தனர் பெரும்பான்மைத் தமிழர். இதே கட்டத்தில் தமிழ்மொழியை மட்டும் பேசிக்கொண்டிருந்தால், வயிறு நிறையுமா? மானம் காக்கப்படுமா? வசதியான வாழ்வு தான் கிடைக்குமா என்று எண்ணிய சிறுபான்மைத்தமிழர், புத்தமதத்தை தழுவவும், சிங்கள மொழியைக் கற்கவும், டட்லி அரசாங்கம் சந்தர்ப்பம் கொடுத்ததே தமது ஒரு வரப்பிரசாதமாகக் கருதினர்.

# யாழ். நவீன சந்தை 7 மாதத்தில்முடிவடையுமாம்

யாழ்ப்பாணம், புதன்

'யாழ்ப்பாணம் நவீன சந்தையை ஒப்பந்தத்தின்படி 18 மாதத்திற்குள்ளேயே கட்டிமுடிக்க வேண்டும். ஆனால் இதனை எப்படியாவது 7 மாதத்தில் நாம் முடிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்'

சந்தைக் கட்டட ஒப்பந்தத்தை செய்துள்ள கொழும்பு 'மைட்' ஸ்தாபனத்தின் அதிபரான கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா இவ்வாறு தெரிவித்தார்.

சந்தைக் கட்டடம் பற்றி இவர் மேலும் தெரிவிக்கையில் சந்தையின் முதற் கட்ட வேலை இவ்வருடத்துள் பூர்த்தியாகி விடுமென்றும், முதற் கட்டத்தில் ஒரே மாதிரியான 3 கட்டடங்கள் போட ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றதென்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது 'மைட்' ஸ்தாபனம் 6 மாதத்திற்கு முன்னரே கட்டட ஒப்பந்தங்களையும் செய்வதென முடிவு செய்தது. இதற்காகப் பொது வேலைப்பகுதிக்கு விண்ணப்பித்து எமக்குடைய தொழில் நுட்ப அறிவு, அனுபவம், பணவசதி முதலியவற்றுக்குத் தகுந்த அத்தாட்சி சமர்ப்பித்து 300,000 ரூபாவுக்குக் குறைந்த வேலைகளுக்கு ஒப்பந்த காரராகப் பதிவு செய்யப்பட்டோம்.

## உழுந்து கிடைக்கும்

கோட்டை, செவ்வாய்

450 தொன் உழுந்து கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்கியுள்ளது இதனால் சமீபகாலத்தில் உழுந்துக் கேற்பட்ட தட்டுப்பாடு நீங்கும். பப்படம் உற்பத்தித் தொழிலின் பிரதான மூலப் பொருளான உழுந்து தடைத்துள்ளதால் பப்படம் கிட்டுப்பாடும் ஏற்படாது.

## எஸ்.ஜே வி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

என்று திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

காங்கேசன் துறைத் தொகுதியில் வி. பொன்னம்பலத்தை தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடுமாறு யாரும் அவரைக் கேட்டதில்லையென்றும் திரு. எஸ். ஜே. வி. தெரிவித்துள்ளார்.

## அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி, செவ்.

வட பகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு கல்வி போதித்து வரும் அவ்வப் பகுதி பாடசாலைகளுக்கு ஒருமைல் சுற்றளவுக்குள்ளிருக்கும் அயல் கிராமத்து ஆசிரியர்களுக்கு முதலில் அப்பாடசாலைகளில் நியமனம் வழங்க வேண்டும் என்றும், பின் அவ்வப் தொகுதியிலுள்ள அப்பாடசாலைகளில் கல்வி போதிக்கும் மற்ற ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்றும் கரவெட்டி பௌத்த பாடசாலைக்கு அருகிலுள்ள அப்பாடசாலைப பெற்றோர்கஅ கல்வி மந்திரி திரு. இரியகொலைக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

## கணபதிப்பிள்ளை

காரைநகரைச் சேர்ந்த டாக்டர் ஏ. கணபதிப்பிள்ளை மறைவு பேரிழப்பாகும். 1894ம் ஆண்டுசெப்டம்பர்மாதம் 14ம்தேதி பிறந்த இவர் தனது ஆரம்பகல்வியைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கற்றார். வைத்தியக் கல்லூரியில் அப்போதிக்கரிப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் மிகத் திறமையுடன் திகழ்ந்தார். இறுதிப் பரீட்சையில் இவரது திறமையைப் பாராட்டி இவருக்கு வைத்தியக் கல்லூரியினர் தங்கப்பதக்கம் வழங்கினார்கள்.

அரசாங்க சேவையில் இருந்த காலத்தில் திரு. கணபதிப்பிள்ளை திறமையுடனும் பொறுப்புணர்ச்சியோடும் கடமையாற்றி மக்களின் பெருமதிப்புக்குள்ளானார். அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் கிளிநொச்சியில் ஒரு சிகிச்சை நிலையத்தை நிறுவி அங்குள்ள மக்களுக்குச் சிறந்த சேவை செய்தார்.

தனது சொந்தக் கிராமத்திலுள்ள பிள்ளையார் கோவில், நாகம்மாள் கோவில் ஆகியவற்றின் திருப்பணி வேலைகளைக் கவனித்தும் வேறு பல சமூக சேவைகளை மக்களுக்களுக் காற்றியும் ஒரு சமூகத் தொண்டனாக விளங்கினார். காரைநகர் சைவமகாசபையின் நிர்வாகசபை அங்கத்தவராகவும் நீண்டகாலமாகக் கடமையாற்றியுள்ளதோடு காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. திசநாயகத்தின் ஞாபகமாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கும் காரணமாகவிருந்தார்.

சிறந்த சமூகத் தொண்டனாகிய திரு கணபதிப்பிள்ளை தனது 7 பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் துக்கத்திலாழ்த்தி விட்டுப் பிரிந்துள்ளார்.

— ஓர் அன்பர்

நெருங்கிய தொடர்பூண்ட முகாந்திரம் இராசையா தற்பொழுது இலங்காஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின் செயலாளராகவும், உறுதுணையாளர்சங்க உப தலைவராகவும் யாழ். பெரியாஸ்பத்திரி நிறுவன உப குழுத்தலைவராகவும் யாழ்ப்பாண யுனைட்டெட் டெனிஸ் கிளப்பின் தலைவராகவும் கடமைபுரிகின்றார்.

## தேவை

பார்மேஸிக்கடைக்கு பார்மேஸிலைசென்ஸ் (Pharmacy Licence) உள்ள ஒரு ஆள் தேவை. 3-ம் திகதிக்கு முன் நேரில் வரவும். என். எஸ். பொன்னுத்துரை 548/2 கே. கே. எஸ். வீதி, யாழ் நகர். 1158

## நினைவு விழா

உடுப்பிட்டி, செவ்.

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 13-வது திருவள்ளுவர் நினைவுவிழாவும் திருவள்ளுவரின் 2000 ஆண்டுநிறைவு விழாவும் எதிர்வரும் 31-ம் திகதி சனிக்கிழமையும், அடுத்த மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

கரணவாய் உபதபாற் கந்தோர் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள 'அண்ணா அரங்கில்' வள்ளுவர்விழா இரு தினங்கள் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சியில் மூன்று வெவ்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு ஒரே மேடையில் உரையாற்றுவது முக்கிய அம்சமாக விளங்கும்.

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யும் தமிழ்க் காங்கிரஸ்கட்சிச் செயலாளருமான திரு. மு. சிவசிதம்பரம், மட்டக்களப்பு எம். பி.யும், தமிழரசுக்கட்சிப் பிரமுகருமான திரு. செ. இராசதுரை, சோவியத் சார்பு) கம்யூனிஸ்ட்கட்சி வடபிரதேசத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் ஆகிய மூவரும் வள்ளுவர்பற்றிப் பேசவிருக்கும் அரசியல் வாதிகளாவர். தற்போது இலங்கையில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள திரு. எஸ். சோமசுந்தரம் செட்டியாரும் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டுள்ளார்.

## கண்டனத் தீர்மானம்

உடுப்பிட்டி, செவ்.

மேதினத்தன்று யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் மீது பொலிஸார் தாக்கியதைக் கண்டித்து உடுப்பிட்டிக் கிராம சபையின் 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ. ஈஸ்வரலிங்கப்பெருமாளினால் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் உடுப்பிட்டிக் கிராம சபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பின்வருபவர்கள் கிளை நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-திரு. வி. சுப்பையா. உப. தலைவர்கள் திரு. சி. சிவசம்பு. திரு. கே. கனகசபை, திரு. என். நல்லதம்பி. காரியதரிசி திரு. கே. வைத்தியநாதன் உப. காரியதரிசி திரு. எஸ். வில்வரத்தினம். தனாதிகாரி திரு. கே. குழந்தைவேலு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org